# தொழிற்சங்க ஒற்றுமை காண்போம்

## இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் அறைகூவல்


# தொழிலாளி

இலங்கை தொழிற் சங்க சம்மேளன வெளியீடு

விலை சதம் 10: இந்தியாவில் 10 நயா பைசா. பக்கங்கள் 8

முரசு 1 | 1963 ஆம் மார்ச் மாதம் 1-ந் தேதி வெள்ளிக்கிழமை | ஒலி 2


## தோட்டத் தொழிலாளர்களின் விசேஷ மாநாடு

### உரிமை பெறத் திரண்டு வாரீர்.

எமது தாய்நாட்டின் பெரும்பகுதி வருமானத்தைத் தேடித் தருவது தேயிலையும் றப்பருமாகும் ஆனல் அத்தேயிலை றப்பர் தோட்டங்களில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்களின் வாழ்க்கை நிலை படுமோசமானதாகவுள்ளது. அவர்களுக்கு அளிக்கப்படும் சம்பளம் மிகவும் குறைந்ததாகும். இந்த நாட்டிலுள்ள ஏனைய தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளத்திற்கும் தோட்டத் தொழிலாளர்கள் பெறுகின்ற சம்பளத்திகுமிடையே மேடும் பள்ளமும் போன்ற பெரும் வித்தியாசம் காணப்படுகிறது. இக்குறையினைப் போக்கும் நோக்கத்தோடு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.

அதைப் பெற்றெடுக்கும் பெறுவதற்கான வழி வகைகளை ஆராயும் நோக்கத்தோடு தோட்டத் தொழிலாளர்களின் மாநாடு ஒன்றை இம்மாதம் 17.ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நுவரேலியா நகர மண்டபத்தில் எமது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்நடத்தவிருக்கிறது.


வகைகளை ஆராயும் நோக்கத்தோடு தோட்டத் தொழிலாளர்கள் மாநாடு ஒன்றை இம் மாதம் (மார்ச்) 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நுவரேலியா நகர மண்டபத்தில் நடத்தவிருக்கிறது.

இலங்கைத் தொழிற் சங்க சம்மேள்னம் இடைவிடாது நடத்திய போராட்டத்தின் காரணமாகவும், 1958-ம் ஆண்டு ஏப்ரல் - மே மாதத்தில் தேயிலை, ரப்பர் தெங்குப்பொருள் உற்பத்தித் தொழிலாளர்களும் என்ஜினியரிங் தொழிலாளர்களும் நடத்திய வீரமிக்க போராட்டத்தின் காரணமாகவும் எமது சம்மேளனத்திற்கும் இலங்கைமுதலாளிமார் சம்மேளனத்திற்குமிடையே 1959ல் கூட்டு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன் மூலம் அத்தொழிலாளர்கள் யாவரும் அரசாங்க அளவு பஞ்சப்படி கோரிக்கையை வென்றெடுத்தனர். அதன் பின்பு எமது சம்மேளனத்தின் முன்முயற்சியினல் இ. போ. ச. தொழிலாளர்களும் வேறு பல பகுதிகளில் வேலை செய்கின்ற தொழிலாளர்களும் இக்கோரிக்கையை வென்றெடுத்தனர்.

தோட்டப் பகுதிகளிலுள்ள தொழிலாளர்களுக்கு இன்று வரை இக்கோரிக்கை வென்றெடுக்கப்படவில்லை. அதைப்பற்றி அவர்கள் மத்தியில் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய இ. தொ கா. - ஐ. தொ. கா. போன்ற ஸ்தாபனங்களும் பேசாதிருக்கின்றன. ஆனல், தோட்டத் தொழிலாளர் சங்கம் உணர்கிறது. ஆதலால், இலங்கையிலுள்ள ஏனைய சகல தொழிலாளர்களும் பெறுகின்ற அரசாங்க அளவு பஞ்சப்படி தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைக்காமலிருப்பது முறையற்றது என்பதனல் அவர்களின் சார்பாக அக்கோரிக்கையை முன்வைத்துப் போராட முன்வந்துள்ளது.

ஆகவே அக் கோரிக்கையை வென்றடுப்பதற்குரிய வழி





இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தினல் சென்ற மாதம் 27-ம் திகதி கொழும்பில் நடத்தப்பட்ட மாபெரும் தொழிலாளர்களின் ஊர்வலத்தினதும் பொதுக்கூட்டத்தினதும் இரு காட்சிகளை மேலே உள்ள படங்களில் காணலாம்.

## அரசாங்கத்தின் போக்கினை மாற்றி வெற்றி பெறுவோம் வாரீர்.

வாழ்க்கைச் செலவு கூடுகிறது. தொழிலாளர்களின் கஷ்டங்கள் அதிகரிக்கின்றன. தாங்கமுடியாத சுமையினல் தொழிலாளர்கள் குமுறிக் கொண்டிருக்கிறர்கள். ஆனல் அரசாங்கம் இதை உணர மறுக்கிறது. பதிலாக தொழிலாள விரோதக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கிறது. வேலை நிறுத்தங்களை முறியடிக்க போலிசையும் ராணுவத்தையும் உபயோகிக்க முனைகிறது. இந்தப்போக்கு நீடிக்குமேயானல் முழுத்தொழிலாளர் வர்க்கத்திற்குமே ஆபத்தாக முடியும். ஆதலால் இப் போக்கை முறியடிக்க இந்த நாட்டிலுள்ள சகல தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் ஒன்று படுவது, ஒரு முகமாக, ஒரே திட்டத்தின் கீழ் பணியாற்றுவது மிகவும் அவசியமாகும் என இலங்கைத்தொழிற் சங்கசம்மேளனத்தினல் கொழும்பு நகர மண்டபத்தில் சென்ற மாதம் 27-ம் திகதி நடத்தப்பட்ட பொதுக் கூட்டத்தில் பேசிய தோழர் என். சண்முகதாசன் குறிப்பிட்டார்.

பொதுக்கூட்டத்திற்கு முன்பதாக கொழும்பு நகர வீதிகளில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்களின் மாபெரும் அணிவகுப்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. அணிவகுப்பைத் தொடர்ந்து கொழும்பு நகரமண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்திற்கு இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் உபதலைவர் தோழர் ஏ. ஆர். எட்மன் தலைமை வகித்தார். தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் 15 அம்சக்கோரிக்கைக்கு ஆதரவாகவும், இ. போ. ச. தொழிலாளர்களின் 9 அம்சக் கோரிக்கைக்கு ஆதரவாகவும் இ. போ. ச. வில் நடைபெற்று வரும் பழிவாங்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவும் இக்கூட்டம் நடத்தப்பட்டது.

அப்பொழுது தோழர் என், சண்முகதாசன் இ. போ. ச. வில் காணப்படும்பிற்போக்குத் தன்மையையும், அரசாங்கம் கடைப்பிடித்துவரும் தொழிலாள விரோதப் போக்கையும் எடுத்து விளக்கினர். மேலும் அவர் பேசுகையில் "இதுநாள் வரை இந்தநாட்டுத் தொழிலாளர்கள் தனிமையில் போராடியதன் காரணமாக பல இடங்களில் வெற்றிபெற முடியாமல் போய்விட்டது. வங்கி ஊழியர்களினதும், துறைமுகத் தொழிலாளர்களினதும், இ. போ. ச. தொழிலாளர்களினதும் வேலை நிறுத்தம் தோல்விபெற இதுவே காரணம். இனிமேலும் இந்த நிலை தொடரக்கூடாது" என்று கூறினர்.

தொடர்ந்து பேசுகையில் "அரசாங்கம் இன்று கடைப்பிடித்துவரும் தொழிலாள விரோதப் போக்கினை எதிர்த்துப் போராடவேண்டிய நிர்ப்பந்தம் இந்த நாட்டுத் தொழிற் சங்கங்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதற்கு முக்கியமாக சகல தொழிற் சங்கங்களும் ஒற்றுமைப்பட்டு, போராட்டங்களை ஒரே முகமாக நடத்துவது அவசியமாகும். அதன் மூலம் தான் அரசாங்கமும் முதலாளிகளும் கடைப்பிடித்துவரும் தொழிலாள விரோதப் போக்கினை முறியடித்து தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பெற்றெடுக்க முடியும்" எனக் கூறி "சகல தொழிற் சங்கங்களும் ஒன்றுபடுவதற்கு நல்ல சூழ் நிலை இப்போதுள்ளது. ஆகவே அதைப் பயன்படுத்தி சகல தொழிலாளர்களின் பொதுப் பிரச்சினைகளுக்காகப் போராடவும் அதன் மூலம் தொழிற் சங்க ஐக்கியத்தை வளர்க்கவும் சிறிய வேற்றுமைகளை மறந்து ஒன்றுபடுமாறு சகல தொழிற் சங்கங்களையும் அழைக்கிறேன்" எனக் கூறினர்.

கூட்டத்தில் தோழர்கள் ஏ. ஐயசூரிய (இ. தொ. ச. ச. உபசெயலாளர்.) சாமல். டி. சில்வா (இ. போ. தொ. ச. உபதலைவர்) டி. ஜி. குருகே (இ.போ, ச. தலைமைக் காரியாலய ஊழியர் சங்கத்தலைவர்) ஆகியோர் பேசினர்கள்.


நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை கடைசிப் பக்கத்தில் காண்க.


தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படியை வென்றடுக்க.

**இம்மாதம் (மார்ச்) 17—ம் தேதி**

ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணி முதல் பிற்பகல் 4-மணி வரை.

**நுவரேலியா நகர மண்டபத்தில் தோட்டத் தொழிலாளர்களின்**

**விசேஷ மகாநாடு**

அனைவரும் வருக.

குறிப்பு: 300 அங்கத்தவர்களுக்கு மேற்படாத தோட்டங்களுக்கு 5-பிரதிநிதிகளும், அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் உள்ள இடங்களுக்கு 10 பிரதிநிதிகளும் அனுமதிக்கப்படுவர்.

இலங்கை தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம்

# அநாகரீக அமெரிக்க ஸ்தாபனங்கள் அழியட்டும்

## ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் அரசாங்கமே தொழிலாளர்களின் ஒத்துழைப்பைப் பெறு

**இலங்கைக்கு கொடுத்து வந்த உதவியை அமெரிக்க அரசாங்கம் நிறுத்திவிட்டது. இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் அமெரிக்க அரசாங்கத்தின் இந்தச் செயலை வண்மையாகக் கண்டிக்கிறது.**

இதன்மூலம் அமெரிக்க அரசாங்கம் எண்ணெய் கம்பெனி முதலாளிகளின் பாதம்தாங்கி என்ற உண்மையை வெளிப்படுத்தியுள்ளது. அத்தோடு முன்னேற்றமடையாத நாடுகளுக்கு அது கொடுக்கும் உதவி ஓர் நயவஞ்சகதிட்டத்தின் வலைவிரிப்பு என்பதையும் நிரூபித்துள்ளது. தான் ஏற்றுக்கொள்ளாத கொள்கைகளைக் கடைபிடிக்கும் அரசாங்கமுள்ள நாடுகளுக்கு தனது உதவியை அமெரிக்க அரசாங்கம் நிறுத்தியது இது முதற் தடவையல்ல. முன்னேற்ற மடையாத நாடுகளின் சுதந்திரத்திற்கு எள்ளளவேனும் அமெரிக்க அரசாங்கம்மதிப்புக் கொடுப்பதில்லை என்பதும் அவர்களின் செயல்மூலம்விளங்குவதோடு, அந்நாடுகளின் உண்மையான முன்னேற்றத்திற்கல்ல அமெரிக்கா உதவியளிக்கிறது. மாருக தங்களுடைய ஏகாதிபத்திய அரசியலுக்குள் சிக்கவைப்பதற்காகவே உதவிகளை வழங்குகிறது என்பதும் தெளிவாகியுள்ளது.

அநாகரிக அமெரிக்க அரசாங்கத்தின் கழுத்தறுப்பு வேலைக்கு இடம்கொடுக்காத இலங்கை அரசாங்கத்தின் தீர்மானத்தைஇலங்கைத்தொழிற்சங்க சம்மேளனம் வரவேற்கிறது. ஆனல், அதேநேரத்தில இவ்வித ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை இலங்கை அரசாங்கம் எதிர்த்துப் போராடி எமது சுதந்திரத்தைப் பாதுகாக்க விரும்புமாயின் தனது தொழிலாளவிரோதக் கொள்கைகளைக் கைவிட்டு ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் தொழிலாளர்களையும் ஒன்றுசேர்த்துக் கொள்ளும்படி இ. தொ. ச. சம்மேளனம் வேண்டுகிறது. அதேநேரத்தில் உண்மையான தேசிய உணர்ச்சியின் காரணமாக மக்கள் ஏகாதிபத்திய பயமுறுத்தலுக்கெதிராக வீறுகொண்டெழுந்துள்ள நிலமையைப் பாவித்து அவர்களின்மேல் புதிய சுமைகளைப்போடவேண்டாம் என இ. தொ. ச. ச. வேண்டுவதோடுஇந்தநாட்டின் கைத்தொழில் விவசாய வளர்ச்சியை தீவிரப்படுத்த திட்டம் வகுக்குமாறும், அன்னியர்க்கு சொந்தமான ஸ்தாபனங்களையும் தேசியமய மாக்குமாறும் தொழிற்சங்கங்களுடையதும் தொழிலாளர் ஸ்தாபனங்களின் ஆதரவோடும் சோஷலிஸ நாடுகளின் உதவியை பூரணமாக உபயோகிக்குமாறும் வேண்டுகிறது.

மேலும், அமெரிக்க படையைத் திருப்பி அனுப்புமாறும் இலங்கை வானொலியோடு வொய்ஸ் ஒப் அமெரிக்கா செய்துள்ள ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறும், ஆசிய பவுண்டேசன் சங்கத்தையும் மற்றும் இந்நாட்டில் கேவலமான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள சகல அமெரிக்க ஸ்தாபனங்களையும் கலைக்குமாறும் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் வேண்டுகிறது. அத்தோடு முக்கியமாக எஞ்சியுள்ள அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிகளையும் தேசிய மயமாக்குமாறும் அரசாங்கத்தை அழைக்கிறது.

# புதிய தலைமையில் புதுவாழ்வு காண ஆலைத் தொழிலாளர்கள் புறப்படுகிருர்கள்

## ஐக்கிய எஞ்ஜினியரிங் தொழிலாளர் சங்கத் தலைமையில் புதிய கோரிக்கைகள்

வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கள் அண்மையில் எமது ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்தில் சேர்ந்தனர். அதன்பின்பு எமது சங்கத்தை நிர்வாகம் ஏற்கவேண்டுமெனக் கோரி 26 நாட்களாக மாபெரும்போராட்டம் நடத்தி வெற்றியும் பெற்றனர். இப்பொழுது அவர்களின் சார்பாக ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கம் கீழ்காணும் கோரிக்கைகளை நிர்வாகத்திடம் சமர்ப்பித்துள்ளது. பெப்ரவரி-27ம் திகதி நடைபெற்ற எமது சங்கத்தின் ஆலைக் கிளையின் கூட்டத்தில் இக்கோரிக்கைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. இக் கோரிக்கைகள் சம்பந்தமாக உடனடியாக உரிய நடவடிக்கை எடுக்கும்படி எமது சங்கம் நிர்வாகத்தை வேண்டியுள்ளது. சமர்ப்பிக்கப்பட்டுள்ளகோரிக்கைகளாவன:

1. அண்மையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் எமது சங்கம் மொத்தமுள்ள 2135 தொழிலாளர்களில் 1457 தொழிலாளர்களின் ஆதரவைப் பெற்று மொத்த தொழிலாளர் தொகையில் 68 வீத அங்கத்தவர்களைக்கொண்ட சங்கமாகவிளங்குகிறது. முன்பு செய்துகொண்ட ஒப்பந்தப்படி எமது சங்கத்தை ஏற்றுக் கொள்வதோடு தொழிலாளர்களின் பொதுப் பிரச்சனைகள் சம்பந்தமாகப் பேசுவதற்கு எமது சங்கத்திற்கு மாத்திரமே உரிமையுண்டு எனபதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். உங்கள் தொழிலாளர்களில் 68 வீதமானுர் எமது சங்கத்தில் இருப்பதால் வேறு எந்தச் சங்கத்திற்கும் 40 வீத அங்கத்தவர்களைப் பெற்று அங்கிராம் பெறுவதற்குரிய தகுதியைப் பெற முடியாது என்பது உங்களுக்கு நன்கு தெரியும்.

2. பெண்களுடைய ஆகக் குறைந்த சம்பளம் ரூ. 1/15 சதமாக உயர்த்தப்படவேண்டும். தேயிலை, றப்பர் ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண் தொழிலாளர்களுக்கு இத்தொகையே வழங்கப்படுகிறது.

3. தற்போதுள்ள சகல வாழ்க்கைப்படிகளும் தள்ளுபடி செய்யப்பட்டு 1-1-62 தொடக்கம் அரசாங்க அளவு பஞ்சப்படி வழங்கப்படவேண்டும்.

4. 1959ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்திற்கேற்ப -04/ சதம் வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும்.

5. 1959-ம்ஆண்டின் கூட்டுஒப்பந்தம் 1-க்கு ஏற்ப 14 வைத்தியவிடுமுறை வழங்கப்படவேண்டும்.

6. 1959-ம் ஆண்டின் கூட்டு ஒப்பந்தம்1-க்கு ஏற்ப 3நாள் காசுவல் விடுமுறை வழங்கப்படவேண்டும்.

7 வருடாந்த விடுமுறைபெறுவதற்கு தகுதி பெறும் மூல அளவை, ஒருநாள் விடுமுறைக்கு 3-லிருந்து 4 ஆகமாற்ற வேண்டும்.

8 சம்பளத்தோடு மேலும் ஒரு முஸ்லிம் விடுமுறை வழங்கப்படவேண்டும்.

9 சங்க சந்தா சம்பளப்புத்தகத்திலிருந்து கழிக்கப்படவேண்டும்.

10 சகல தொழிலாளருக்கும் பாதுகாப்பு மேலாடை வழங்கப்படவேண்டும்.

11சிறந்த சிற்றுண்டிச்சாலை வசதிகள் செய்யப்பட வேண்டும்.

12 ஒய்வு அறைகளும், பெண்களுக்கு , உடைமாற்றுவதற்கும் மேல் கழுவுவதற்கும் தனியறை ஒதுக்கப்பட வேண்டும்.

13 தொழிலாளர் பிராவிடண்ட் நிதிக்கு முற்பட்ட கால சேவைக்கு ஒரு வருடத்திற்கு ஒரு மாத சம்பள வீதம் நஷ்டஈடு கொடுக்க வேண்டும்.

14 நிரந்தரமாக அம்புலன்ஸ் ஒன்று ஆலையில் நிற்கவேண்டும்.

15 ஓர் கடன் உதவித்திட்டம் நிர்வாகத்தால் ஆரம்பிக்கப்பட்டு முதலில் மூலதனம் இடப்படவேண்டும். (பின்பு சிறிது சிறிதாக இதைத் திருப்பி எடுக்கலாம்) தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையைக் கழிக்கலாம். அத்தொகையின் நிர்வாகம் தொழிலாளர் பிரதிநிதிகளையும் நிர்வாகத்தின் பிரதிநிதி ஒருவரைத்தலைவராகவும், கொண்ட செயற்குழுவினுல் கவனிக்கப்பட வேண்டும்.

16 பதவி உயர்வு செய்யப்படும்பொழுது தற்போது சேவையிலுள்ளவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும்.

17 சகல தொழிலாளர்களுக்கும் சம்பள அட்டை கொடுக்கப்படவேண்டும். அதில் சரியான சம்பள விபரம் குறிக்கப்பட வேண்டும்.

19 இரவுநேரங்களில் வேலை செய்பவர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு நஷ்டஈடாகும் முறையில் விசேஷ சன்மானம் வழங்கவேண்டும்.

20 இரவில் வேலைசெய்துவிட்டு வீட்டுக்குச் செல்லபஸ் அல்லது புகையிரத சேவையைப் பெற முடியாத தொழிலாளர்களுக்கு உறங்குவதற் வசதி செய்யப்படவேண்டும்.

## அமெரிக்க இழி செயலை செஞ்சீன தொழிலாளர்கள் கண்டிக்கிருர்கள்.

அமெரிக்க அரசாங்கம் எமது நாட்டிற்கு அளித்துவந்த உதவியை நிறுத்தியது. இதற்கெதிராக இன்று நாடுபூராவும் தேசாபிமானிகள் கண்டனக் குரல் எழுப்பிவருவது தெரிந்ததே. எமது தாயகத்தின் தன்மானம் காக்கும் போராட்டத்திற்கு பூரண ஆதரவளிப்பதாகவும், கெனடி அரசாங்கத்தின் கேவலமான செயலைக் கண்டித்தும் எமது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திற்கு பல நாட்டுத் தொழிற் சங்கங்களும் நற்செய்திகளும் அனுப்பிய வண்ணம் இருக்கின்றன.


கீழே சீனத் தொழிற்சங்க சம்மேளன்ம் அனுப்பியுள்ள தந்திச் செய்தியை தமிழாக்கித் தருகிறோம்...

"அமெரிக்க அரசாங்கத்தின் இச்செயல், உதவியென்பது ஏனையநாடுகளின் சுதந்திரத்திலும் பொருளாதார வளர்ச்சியிலும் தலையிட, நவீன காலனி ஆதிக்கத்திற்கு வழிகோலும் ஓர் கருவியாகவே பாவிக்கப்படுகிறது என்பதைத்தெளிவுபடுத்யுள்ளது. இலங்கையின் சுதந்திரத்தையும் தன்மானத்தையும் பாதுகாக்கும் போராட்டத்தில், அமெரிக்க இழிசெயலை எதிர்ப்பதில் ஒன்றுபட்டு நிற்கும் சகல இலங்கைத் தொழிற்சங்கங்களுக்கும் பொதுமக்களுக்கும் எமது வாழ்த்துக்கள். அத்தோடு இலங்கை மக்கள் ஆசிய ஆபிரிக்க உலக மக்களின் ஆதரவோடு ஒன்றுமட்டு நின்று அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயமுறுத்தலை முறியடிப்பார்கள் என்பது திண்ணம்"

# செங்கொடிச் சங்கத்தின் மாபெரும் வெற்றி

## சீரிய சேவைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு

**இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் நாளுக்கு நாள் புதிய சக்திபெற்று வளர்ந்து வருகிறது. தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினைகளில் இச் சங்கம் முன்னின்று போராடுவதே இதற்குக் காரணமாகும். கடந்த ஆண்டுகளில் தோட்டத் தொழிலாளர்களுக்கு எமது சங்கம் பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்தது. இவ் வருடமும், ஆரம்பத்திலேயே எம் சங்கம் மாபெரும் வெற்றியொன்றைப் பெற்றுள்ளது. தலவாக்கலை மாவட்டத்தின் லின்டுலைப் பகுதியிலுள்ள கென்போல்ட் தோட்டத்தில் எமக்கு இவ்வெற்றி கிடைத்துள்ளது.**



ரொசாரியோ பர்ணந்து

[இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்க தலவாக்கலை மாவட்டப் பிரதிநிதி]

வேலாயுதம், ரெங்கையா, வேலு ஆகியமூவரும்கென்போல்ட் தோட்டத்தில் வேலை செய்தவர்கள். சிலம்பாயி, பெருமாயி, ஜானகி ஆகியோர் முறையே வேலாயுதம் ரெங்கையா, வேலு ஆகியோரின் மனைவிமார்கள். மாரியாயி ரெங்கையாவின் மகள். இவர்கள் நாலுபேரும் அந்தத்தோட்டத்திலேயே வேலைபார்த்து வந்தனர். 1960ம் ஆண்டில் இவர்கள் திடீரென வேலைநீக்கம் செய்யப்பட்டனர். மேலதிகாரிகளுக்கு வேலாயுதம், ரெங்கையா வேலு ஆகியோர் பணிய வில்லையெனவும் குழப்பம் விளைவித்ததாகவும் பயமுறுத்தியதாகவும் இவர்கள் மேல் குற்றம்சாட்டப்பட்டது. கணவன்மார்களை வேலையினின்றும் நீக்கியதனுல் அவர்களுடையமனைவிமார்களையும் ரெங்கையாவின்மகள் மாரியாயியையும் தோட்டசுப்பிரிண்டன் வேலையை விட்டு நீக்கினுர்.

இந்த வேலை நீக்கத்தை எதிர்த்து தொழிலாளர்களின் சார்பில் இலங்கைத்தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழில் மத்தியஸ்த சபைக்கு விண்ணப்பித்தது. ரெங்கையா வின் மகள் மாரியாயி கலியாணம் செய்துகொண்டுதோட்டத்தை விட்டு வெளியேறியதால் அவரின்சார்பாகப் போடப்பட்ட மனுவாபஸ் பெறப்பட்டது,

ஏனையோரின் மனுக்கள்தொழில் மத்தியஸ்த சபையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது அப்பொழுதுதோட்ட நிர்வாகத்தினரதும் சங்கத்தினரதும் சாட்சிகளும், அத்தாட்சிகளும் முன்வைக்கப்பட்டன. அவற்றைக்கவனித்த தொழில் மத்தியஸ்தசபைத் தலைவர்தோட்ட நிர்வாகத்தின் குற்றச்சாட்டுக்களை ஏற்கமுடியாதெனக்கூறியதோடு தொழிலாளிகள்தமது ஏகோபித்த முடிவுகளின்படியே நடந்துள்ளனரென்றும், அவ்விதம்நடப்பதற்கு அவர்களுக்கு போதிய அதிகாரம் இருப்பதாகவும்தீர்ப்புக் கூறினுர். அத்தோடுதீர்ப்புப் வழங்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு கிழமைக்குள் சகலருக்கும் வேலை கொடுக்குமாறும் தீர்ப்பு வழங்கினுர்.

இரண்டாவதாக வேலையற்றிருந்த காலத்திற்கு சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்ற சங்கத்தின் மனுவை ஏற்று ரெங்கையா, வேலு ஆகியோர்களுக்கு முறையே ரூபா1150ம் சிலம்பாயி, ஜானகி பெருமாயி ஆகியோருக்கு முறையே ரூபா 900/- வழங்கும்படியும் தீர்ப்பளிக்கப்பட்டது. மேலும் வேலையற்றிருந்த காலம் அவர்களுடைய சேவையில் கழிக்கப்படக் கூடாதெனவும் மத்தியஸ்த சபைத் தலைவர் தீர்ப்பளித்தார்.

இவ்வெற்றி தலைவாக்கலை பகுதியிலுள்ள தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பெரும்பரபரப்பை உண்டாக்கியுள்ளது. அத்தோடு பல தோட்டங்களைச்சேர்ந்த தொழிலாளர்கள் இதனுல் எமது சங்கத்தில் புதிதாகச் சேருவதற்கும் முன்வந்துள்ளனர். தோட்டத் தொழிலாளர்களின் உண்மையான ஒரே சங்கம் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் (செங்கொடி) சங்கம் என மலரும் நாள் வெகு தூரத்திலில்லை !!

தலையங்கம்

# தொழிற்சங்க ஒற்றுமை சமைப்போம்.

தொழிற்சங்க இயக்கங்களுக்கிடையே தாமதமின்றி ஒற்றுமை ஏற்படுத்தப்படவேண்டும். இத்தனை நாட்களாக இருந்திலும் பார்க்கக்கூடுதலான முறையில்தொழிற்சங்கங்கள்போராட்டத்தில் ஒன்றுபட்டு செயலாற்றுதல் அவசியமானது. இது தான் கடந்த இ. போ. ச. போராட்டத்தின் மூலம் பெறக்கூடிய முக்கியமான போதனையாகும்.

பல்வேறு துறைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அண்மைக் காலங்களில் தமது கோரிக்கைகளுக்காகப் போராடியுள்ளனர். அவர்களுடைய போராட்டம் தனிமையில், அவர்களால் மாத்திரமே நடத்தப்பட்டது. அதேநேரத்தில் அரசாங்கம் தொழிலாளி வர்க்க விரோத கொள்கைகளைக் கடுமையாகக் கடைப்பிடிக்கிறது. இந்நிலையில் போராடிய தொழிலாளத் தோழர்கள் தங்கள் கோரிக்கைகள் எதையும் பெறுமலே மீண்டும் வேலைக்குச் செல்கின்ற பரிதாப நிலையை நாம் பலமுறை காண வேண்டியிருந்தது. ஒரு வருடத்திற்கு முன்பதாக, நாற்பது நாட்களுக்கு மேல் துறைமுகத் தொழிலாளர்கள் வீரஞ் செறிந்த வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தினுர்கள். இறுதியில் வேலைநிறுத்தத்தைக் கைவிட்டு வேலைக்குச்செல்லவேண்டிய நிலைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். வங்கிஊழியர்கள் ஐம்பது நாட்களுக்கு மேல் வேலை நிறுத்தம் செய்து வெளியிலே நின்றுர்கள். கடைசியில் அவர்களுக்கும் அதே கதிதான் ஏற்பட்டது. கடந்த மாதம் இ. போ. ச. தொழிலாளர்கள் முன்னெப்போதும் கண்டிராத உறுதியான வைச்சிரப் போராட்டம் நடத்தினுர்கள். முடிவில் அவர்களும் வெறுங் கையுடன் வேலைக்குத் திரும்ப வேண்டிய நிலமைஏற்பட்டது. இவற்றிலிருந்து சரியான போதனையை நாம் பெறவேண்டும்.

நாளுக்கு நாள் அரசாங்கத்தின் தொழிலாள விரோதப் போக்கு அம்பலமாகிக் கொண்டு வருகிறது: ஆகவே நாம் நடைபெற்றவற்றிலிருந்து உரிய பாடங்களைக் கற்றுக் கொள்வது மிகவும் அவசியமாகிறது. இந்நாட்டு தொழிலாளர்வர்க்கம் காலம் சென்ற எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு நன்றியுள்ளதாக உள்ளது. காரணம் அவர் ஆட்சிக்கு வந்த பின் தான் சில ஜனநாயக, தொழிற்சங்க உரிமைகளை இந்தநாட்டுத் தொழிலாளிவர்க்கம் பெற்றது. தொழிற்சங்கங்கள் உருவாவதைஅவர் ஆதரித்தார். வேலை நிறுத்தம் நடைபெறும்பொழுது தொழிலாளர்களோடு பேச்சுவார்த்தை நடத்த அவர் மறுத்தது கிடையாது. 1959ம் ஆண்டு செப்டம்பர் மாதம் துப்பாக்கிக்குண்டு அவர் உயிரைப் பறித்தது. ஆனால் அந்தக் குண்டிலும் கொடுமையான முறையில் அவரின் பல முற்போக்குக் கொள்கைகளை இந்த அரசாங்கம் கொலை செய்துள்ளது - செய்து வருகிறது.

சம்பளம் உயரக்கூடாது என்ற கொள்கையை அரசாங்கம் இப்பொழுது கடைப்பிடிக்கிறது. அதன்கீழ் தொழிலாளர்களின் ஒரு கோரிக்கையைத் தானும் வழங்க - இடம் கொடுக்க அரசாங்கம் மறுக்கிறது. அதற்கும்மேலாக தொழிலாளர்களை, ராணுவத்தையும் பொலிசையும் கொண்டு பயமுறுத்தி வேலை நிறுத்தம் செய்வதிலிருந்து தடுக்கவும் அவர்களின் உரிமைகளைத்தகர்க்கவும் அரசாங்கம் முனைந்துள்ளது. அதுமட்டுமல்ல... அண்மையில் நடைபெற்ற இ. போ. ச. வேலை நிறுத்தத்தை முறியடிக்க, பத்திரிகைச் செய்திகளையும் தணிக்கை செய்தது. வேலை நிறுத்தத்தின்போது பேச்சு வார்த்தைக்கு வர மறுக்கிறது அரசாங்கம். அதிலும் கூடுதலாக கருங்காலிகளை உற்சாகப்படுத்துகிறது. வேலை நிறுத்தம் செய்தவர்களைப் பழிவாங்குதலையும் உற்சாகப்படுத்தும் அளவிற்கு அரசாங்கம் முன்னேறியுள்ளது. தனது ஊழியர்களின் கோரிக்கைகளை மட்டும் அரசாங்கம் மறுப்பதோடு நிற்கவில்லை. கொள்ளைலாபமடித்து வெளிநாட்டுக்கு அள்ளிச் செல்லும் தனிப்பட்ட ஸ்தாபனங்களுக்கும் அந்த ஸ்தாபனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாமென உத்தரவு போடுகிறது.

அரசாங்கத்தின் இவ்வித தொழிலாள விரோதக் கொள்கைகளைக் கண்டும் தொழிற்சங்கங்கள் ஒற்றுமைப்பட நினைக்காவிடில் அது தற்கொலைப் பாதையாகவே அமையும். பத்துலட்சத்துக்கு மேற்பட்டவர்களை இந்தநாட்டு தொழிற்சங்கங்கள் அங்கத்தவர்களாகக் கொண்டுள்ளன. ஆகவே அவை மிகவும் சக்திபெற்ற இயக்கமாக விளங்குகிறது. அரசியல் தலைமையில் உள்ள வேறுபாட்டின் காரணமாக அவர்கள் பிளவுபட்டு நிற்பதே மிகமுக்கிய குறைபாடாகும். இந்த ஒருமுனைப் போக்கினை ஒழிக்க வழி காண வேண்டும். ஓர் பொதுத் தொழிற்சங்க திட்டத்தின் கீழ் சகல தொழிற் சங்கங்களையும் ஒன்றுபடுத்த பாதை சமைக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் பிடிவாதமான, தொழிலாளர் விரோதக் கொள்கையைக் காணும் பொழுது இந்த ஒற்றுமைமிக முக்கியமாகிறது. முதலாளிகளையும் அரசாங்கத்தையும் தகுந்த தருணத்தில், சகல துறைகளில் உள்ள தொழிலாளர்களின் ஒற்றுமைப்பிணைப்பில் போராட்டம் நடத்தினுலன்றி தோற்கடிக்க முடியாது. அதற்கு இந்தவிதமான உறுதியான ஒற்றுமையும் உயர்ந்த பட்ச ஐக்கியமும் அவசியமாகும்.

இந்தவித ஒற்றுமையை உருவாக்க தொழிலாளர்கள் தலைவர்களை எதிர்பார்த்திருப்பது தவறுகும். ஒற்றுமைக்குரல் அடித்தளத்திலிருந்து கிளம்பவேண்டும். உதாரணத்திற்கு துறைமுகத் தொழிலாளர்கள் புகையிரதத் தொழிலாளர்களை நாடவேண்டும். இருபகுதியினர்களும் சேர்ந்து தபால், இ. போ. ச. துறையிலுள்ளவர்களை அடைய வேண்டும். அவ்விதம்பெரிய மலையாக இவ்வித ஒற்றுமை உருப்பெறவேண்டும். அதன்மூலம்தான் அவ்வித ஒற்றுமையை விரும்பாத தலைமையை உதைத்துத் தள்ளிவிட்டு அகில இலங்கையிலும் உண்மையான தொழிற்சங்க ஒற்றுமைக்கு வழி சமைக்கமுடியும்.

# தொண்டமானே! அமெரிக்க ஆதிக்கத்திலிருந்து வெளியேறு

## இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் கோரிக்கை

**இலங்கைக்கு கொடுத்துவந்த உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ளது சகலரும் அறிந்ததே. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக அமெரிக்க ஆதிக்கத்திலுள்ள அகில உலக சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்து இலங்கைத் தொழிலாளர் சங்கம் விலக வேண்டுமெனக் கோரி அதன் தலைவர் திரு. எஸ். தொண்டமானுக்கு எமது இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தலைவர் திரு. எஸ். நடேசன் ஓர் கடிதம் எழுதியுள்ளார்.**

உலக தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்து (அங்கத்தவர் தொகை 12 கோடி) இரண்டாவது உலக யுத்தத்தின்பின் பிரிந்துசென்றஒருஸ்தாபனமே அகில உலக சுதந்திர தொழிற் சங்க ஸ்தாபனம். அதன் மொத்த அங்கத்தவர் தொகை ஐந்து கோடிக்கும் குறைவானதாகும் அவ்விஸ்தாபனம் முதலாளித்துவத்தை - குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தை ஆதரிப்பதாகவும் அதன் ஆதிக்கத்திலேயே இயங்கியும் வருகின்றது இந்த ஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கக்கூடிய ஒரேஒரு இந்நாட்டுத் தொழிற்சங்கம் திரு. தொண்டமானைத் தலைவராகக்கொண்ட இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மட்டுமேயாகும்.

அவர் தனது கடிதத்தில் இலங்கைக்கும் அமெரிக்காவுக்குமுள்ள தகராறு மிகச் சிறியதெனவும் "இலங்கைப் பெற்ரேலியம்கார்ப்பரேசன் எடுத்த எண்ணெய்க் கம்பெனிகளின் உடமைகளுக்கு அந்த ஸ்தாபனங்கள் ரூபா 4-கோடி நஷ்டஈடு கோருகின்றன. ஆனல் பெற்ரேலியம் கார்ப்பரேசனின் மதிப்புப்படி ரூபா ஒரு-கோடியேயாகும். இந்தவிதமான அநியாயக்கோரிக்கைக்கு இணங்கமுடியாதென 'திருமதி சிரீமாவோ பண்டாரநாயக்கா' கூறினுர். அதற்காக எமதுநாட்டின் நிலைமைபற்றி சிறிதும் சிந்திக்காது அமெரிக்கா உதவியை நிறுத்தியது. அதன்மூலம் எமதுநாட்டை அதன் காலடியில் பணியவைக்க முடியும் என அவர்கள் எதிர்பார்த்தனர். இதன் காரணமாக தேசாபிமானிகள் பலர் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கெதிராக கிளர்த்தெழுந்துள்ளனர். அத்தோடு அமெரிக்க உதவியின் உண்மைரூபத்தை இலங்கை மக்கள் அறிவதற்கும் இது சந்தர்ப்பம் அளித்துள்ளது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

"மேலும், இந்த நிலமையில் இந்த நாட்டில் அமெரிக்க ஏகபோக முதலாளிகள் செலுத்தி வரும் ஆதிக்கத்தைக் குறைப்பதற்கு உதவியாக உடனடியாக அகிலஉலக சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்திலிருந்து விலகுமாறும், இந்நாட்டிலிருந்து அந்த ஸ்தாபனத்தோடு இணைந்துள்ள ஒரேஒரு பெரிய தொழிற்சங்கம் என்ற முறையிலும் இது அவசியம்" எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## பாரைத் தாங்கு.

(யாழ்ப்பாணக் கவிராயர்)

உயர்வான எண்ணங்கள் கொண்டாய் நாட்டின்
உயர்ச்சிதனை ஓயாது ஓம்பி நின்ருய்
அயர்வின்றி அல்லுந்தோ ருக்கம் செய்தாய்
அளப்பரிய பெருவினைகள் செய்து நீத்த
வியர்வைக்கண் விசைகாட்டிப் பெற்ற தெல்லாம்
வியனுகலம் உற்ற பெறு செல்வம்; ஆனல்,
துயர்க்கடலில் நீதவித்து நிற்பா யென்ருல்
துடிக்குதடா என்நெஞ்சம் துன்பச் சூழல்.

பலகாலும் உனைநம்பி வாழும் மக்கள்
பயன் சற்றும் உனக்காகச் செய்வா ரென்று
சிலநாளும் சிந்திக்கா துழைத்து நின்ருய்
சீரியநற் செயலுக்கு வணக்கஞ் செய்வேன்
உலகாளும் உரிமைதான் உனக்குண் டென்ற
உண்மைதனை மறந்திட்டார் உலுத்த ராமே!
விலைபேசும் நாள்மாறி வேண்டு கின்ற
வித்தகனுய் மாறும்நாள் தூர இல்லை.

முதலாளி உனைவருத்தி நின்ற தெல்லாம்
முதலோடு அவர்பெறுவர் உலகந் தந்த
இதமான பாடமிது எண்ணிப் பாராய்;
புரட்சியினுல் கண்ட உண்மை.
விதமான விரட்டல்களும் வேஷம் மேவும்
விஷநாய்கள் தனைச்சாடி வெற்றி கொள்ள
நிதமொன்று கூடிநல நிலமை பெற்று
நிறுவிடுவாய் நீர்மைபெறு உலகந் தன்னை.

பாடுபட்ட கூலிதனைப் பதுக்கி வைத்து
பண்பற்ற இழிசெயல்கள் போர்த்து மூடி
கேடுகெட்ட முதலாளி கிளரு கின்ற
கொள்கையொரு கொள்ளைதனை கொண்டு வீழ்த்தி
நாடுபல பீடுநடை போடு கின்ற
நல்லநிலை நீபார்த்து இருந்தும்கூட
வாடுநிலை தனைநித்து வர்க்க மொன்றி
வாகைதனைச் சூடுதற்குப் புறப்ப டாயே!

தொழிலாளி நீயென்ருல் துயரம் மேவும்
தொகையான கூட்டங்காண் கடலைப் போல
எழிலான வாழ்வமைத்தும் இன்பம் இல்லை.
இருக்கின்ற சுகபோகம் யாருக் காக?
வழிகாண ஒருபாதை வகுத்துக் கொண்டால்
வாகான உன்தோள்கள் துடித்து நிற்கும்
பழிகாண முனைந்தவர்கள் பாவந் தீர்க்கும்
பாதைதனை நாடட்டும் பாரைத் தாங்கு.

## வெற்றிக்குமேல் வெற்றி!

தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் நாளுக்குநாள் இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தினதும் அதன் சங்கங்களினதும் மதிப்பு உயர்ந்து வருகிறது. அண்மையில் நடைபெற்ற மூன்றுவாக்கெடுப்புகள் இதை மேலும் நன்ருக தெளிவுபடுத்தின.

### வெள்ளவத்தை ஆலை

வெள்ளவத்தை நெசவாலைத் தொழிலாளர்கள், 26 நாட்களாக நடத்திய வீரமிக்க போராட்டத்தின் மூலம் எமது சங்கத்திற்கு தற்காலிக அங்கீகாரம் பெற்றவர்கள் என்பது வாசகர்கள் அறிந்ததே. எங்களுடைய சங்கத்தின் உண்மையான சக்தியை நிர்ணயிக்க ஓர் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என அப்பொழுது ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அவ்வாக்கெடுப்பு கடந்த மாதம் நடைபெற்றது. அதில் எமது சங்கம் மாபெரும் வெற்றியைப் பெற்றது. அவ்வாலையில் மொத்தம் பதியப்பட்ட தொழிலாளர்கள் 2135. அதில் 1457 பேர் எமது ஐக்கிய என்ஜினியரிங் தொழிலாளர் சங்கத்திற்கு வாக்களித்தனர். வேறு சங்கங்களுக்கு ஒருவாக்கேனும் பதிவு செய்யப்படவில்லை. ஆலையிலுள்ள மொத்த தொழிலாளர்களில் 68 வீதமானேர்எமது சங்கத்தில் உள்ளனர் என்பது இதன்மூலம் நிரூபிக்கப்பட்டது ஆதலால் [illegible] ஓம் முடிவின்படி வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்களின் பொது பிரச்சனைகள் சம்பந்தமாக பேசுவதற்கு எங்கள் சங்கத்திற்கு மாத்திரம் தான் உரிமையுண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுமாறு நாம் வேண்டியுள்ளோம்.

### சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ்

இவ்விஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் கடந்தவருடம் சுதந்திர கைத்தொழில் வர்த்தக சங்கத்திலிருந்து பிரிந்துவந்து எமது சங்கத்தில் சேர்ந்தனர். இங்கு நடைபெற்ற வாக்கெடுப்பும் மேற்கண்டமாதிரியான முடிவையே அளித்தது. இலங்கைப் பொதுத்தொழிலாளர் சங்கத்திற்கு 393 வாக்குகள் பதிவாயின. மொத்த தொழிலாளர்களில் இது 61 வீதமாகும். சுதந்திரக்கட்சி சங்கத்திற்கு 24 வாக்குகள்கிடைத்தன

### வொலங்கா லிமிட்டட்

இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களும் சுதந்திர கைத்தொழில் வர்த்தக சங்கத்திலிருந்து பிரிந்து எமது சங்கத்திற்கு வந்தவர்களாவர். மொத்தமுள்ள 435 தொழிலாளர்களில் 251 தொழிலாளர்கள் எமது தேயிலை ரப்பர், தெங்கு மற்றும் பொது உற்பத்தி தொழிலாளர்கள் சங்கத்திற்கு வாக்களித்தனர். மொத்த தொழிலாளர்களில் இது 57 வீதமாகும்.

# ஐக்கியமும் — போராட்டமும்

## கொள்கையின் செயல்முறை பற்றி சிறிது சிந்திப்போம்

( என். சண்முகதாசன் )

**பண்டாரநாயக்கா அரசாங்கம் 1956 ஏப்ரல் மாதத்தில் அதிகாரத்திற்கு ஏறியது. அதன்பின்பு தொழிலாள வர்க்க இயக்கத்திற்குள், இந்த ஆட்சிக்கு எவ்வளவு தூரம் ஆதரவளிக்க வேண்டும், எவ்வளவு தூரம் இதனுடன் போராட வேண்டும் என்பதுபற்றி வாதங்களும், அதன் காரணமாக தெளிவற்ற நிலமையும் ஏற்பட்டுள்ளது. 1960 ஜூலை மாதத்தில் சுதந்திரக்கட்சி கம்யூனிஸ்ட் கட்சி, சமசமாஜக் கட்சியுடன் செய்துகொண்ட போட்டியில்லா ஒப்பந்தத்தின் காரணமாக ஆட்சிக்கு வந்தது. அதன்பின்பு இவ்வாதம் மேலும் கூர்மையடைந்துள்ளது.**



இவ் விவாதத்தில் கீழ்காணும் இரண்டுவித தீவிர வாதக் கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

ஒரு கருத்துப்படி சுதந்திரக் கட்சி அரசாங்கம் ஓர் முற்போக்கு, ஏகாதிபத்திய எதிர்ப்பு, யூ. என். பி. விரோத கொள்கை படைத்தது. ஆதலால் லாப நஷ்டங்களைப் பாராது அதற்கு ஆதரவளிக்க வேண்டும். இல்லையேல் தொழிலாளி வர்க்க எதிரியான, வெறுத்தொதுக்கப்பட்ட யூ.என்.பி. மீண்டும் ஆட்சிக்கு வந்து விடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மற்றக் கருத்துப்படி சுதந்திரக் கட்சி யூ. என். பி. யைப் போன்ற மற்றுமொரு முதலாளி வர்க்க கட்சி எனவும், இரண்டிற்குமிடையே வித்தியாசமோ, வேறுபாடோ கிடையாது எனவும் ஆதலால் எந்த விதமாக யூ. என். பி. முறியடிக்கப்பட்டதோ அதே விதத்தில் அதே வேகத்தில் சுதந்திரக் கட்சியும் முறியடிக்கப்பட வேண்டும் எனவும் கூறப்படுகிறது.

இரண்டு கருத்துக்களிலும் ஏதோ ஓரளவு உண்மையிருக்கின்றது. ஆனால் உண்மையான சரியான நிலையென்ன. இரண்டு கருத்திற்கும் இடைப்பட்ட நிலையிலேதான் சரியான நிலையிருக்கின்றது.

### தேசிய முதலாளித்துவம்

உண்மையான நிலையை, சரியான கருத்தை உருவாக்குவதற்கு சுதந்திரக் கட்சியின் வர்க்க அடிப்படையை முதலில் தெளிவுறத் தெரிந்துகொள்ளவேண்டும். இன்றைய சுதந்திரக் கட்சி அரசாங்கமும், அதற்கு முன், திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவின் தலைமையில் இருந்த எம். ஈ. பி. அரசாங்கமும் தேசிய முதலாளிகளின் அரசாங்கமாகும். தேசிய முதலாளிகள் என்று அழைப்பதின் மூலம் அவர்களை கொம்புரடா முதலாளிகளிடம் இருந்து தனிமைப்படுத்துகிறோம். கொம்புரடா முதலாளிகளின் தன்மைகள் அன்னிய ஏகாதிபத்தியத்துடன் ஒன்றிப் பிணைந்ததாகும். அவர்கள் தமது எஜமானர்களான அன்னிய ஏகாதிபத்தியத்திற்குத் தொண்டு செய்வதையே கடமையாகக் கொண்டவர்கள். இலங்கையில் இந்த வர்க்கத்தை யூ. என். பி. பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

காலனி நாடுகளிலும், காலனி சார்பு நாடுகளிலுமுள்ள முதலாளிவர்க்கம் உடனடியாகவோ அன்றேல் காலம் தாழ்த்தியோ இருபிரிவாகப் பிளவுபடுகின்றது. அவை முறையே கொம்புராடா முதலாளிகளாகவும், தேசிய முதலாளிகளாகவும் பெயர் பெறுகின்றனர். கொம்புராடா பகுதியினர் அன்னிய ஏகாதிபத்தியத்தினரின் ''கமிஷன் ஏஜண்டுகளாகவும்'' கங்காணிமார்களாகவும் விளங்குகின்றனர். அதனால் அவர்கள் பிற்போக்குத் தன்மையைப் பெறுகிறார்கள். தேசிய முதலாளிகள் தாங்கள் ஏகாதிபத்தியத்தின் இடத்தைப் பிடிக்க, முதலாளிவர்க்கமாக உருவெடுக்க விரும்புகிறவர்கள். இதன் காரணமாக முன்னையதிலும் பார்க்க சிறிது முற்போக்குத் தன்மைபெற்றதாக, ஏகாதிபத்தியத்தை எதிர்பவர்களாக விளங்குவார்கள். ஏகாதிபத்தியம் உள்நாட்டில் ஒரு முதலாளி வர்க்கம் உருவானால் பொருளாதாரத் துறையில் தங்களுடன் போட்டி போடுவார்கள் என்பதனால் அவ் வளர்ச்சியை விரும்பாது. இதன் காரணமாகத்தான் மேற்கூறிய சில முற்போக்குக் கொள்கைகள் தேசிய முதலாளி வர்க்கத்தின் மத்தியில் உருவெடுக்கிறது. ஏகாதிபத்தியத்தை அகற்றி அதன் இடத்தில் தாங்கள் ஓர் சக்திமிக்க முதலாளிவர்க்கமாக உருவெடுக்க வேண்டும் என்ற தேசிய முதலாளிகளின் ஆசையும், அவாவும் மேலும் மேலும் வெளிப்படையாகவே ஏகாதிபத்தியத்துடன் ஒற்றுமைப்படுவதற்கு வழி வகுக்கிறது.

ஒரு புறம் தேசிய முதலாளிகளுக்கிடையிலும், மறு புறத்தில் அன்னிய ஏகாதிபத்தியத்திடமும் அதன் தாசர்களான கொம்புராடா முதலாளிகளுக்கிடையிலும் ஏற்படும் இந்த அடிப்படை முரண்பாட்டை தொழிலாளிவர்க்கம் நன்கு கவனத்தில் கொள்ளவேண்டும்.

### ஒரு முனைப்போக்கு உதவாது

உள் நாட்டில் ஏகாதிபத்தியத்தின் பிடி மிகவும் பெலமாக இருக்கும்வரையில் (இலங்கையைப் பொறுத்த வரையில் இதுதான் நிலமை) தொழிலாளிவர்க்கம் இருபக்கத்தார்க்கும் நலன் தருகின்ற ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில், தற்காலிகமானதாக இருப்பினும் ஒற்றுமைப்பட்டு நிற்க வேண்டும். கொம்புராடா முதலாளிகளின் அரசாங்கத்திற்கும், தேசிய முதலாளிகளின் அரசாங்கத்திற்கும் மிடையில் இருக்கக்கூடியவேறுபாடுகளை ஏற்கமறுப்பது ஒருமுனைப் போக்காகும். சுதந்திரக் கட்சி அரசாங்கத்திற்கும் யூ. என். பி. அரசாங்கத்திற்கு மிடையில் எவ்வித வேறுபாடும் கிடையாது எனக் கருதுவது ஒரு முனைப்போக்குமட்டுமல்லாது, உண்மையை ஏற்கமறுப்பதும் ஆகும். தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவு பெற்ற பல முற்போக்குச் சாதனைகளை நிறைவேற்றிய பெருமை சுதந்திரக் கட்சிக்கு உண்டு. உதாரணமாக, பஸ் போக்குவரத்து, கொழும்பு துறைமுகம், காப்புறுதி ஸ்தாபனம், இலங்கை வங்கி போன்றவற்றை தேசியமயமாக்கியதும், உதவிபெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுத்ததுமாகும். யூ. என். பியினுடைய வெளிநாட்டுக் கொள்கையிலும் பார்க்க குறிப்பிடக்கூடிய நல்ல மாற்றங்கள் சுதந்திரக் கட்சி அரசாங்கத்தில் காணமுடிகிறது. அண்மையில் ஏற்பட்ட சீன-இந்திய தகராறில் ஏகாதிபத்தியத்தின் கொள்கையை ஏற்க மறுத்தது ஒருஉதாரணமாகும்.

ஏகாதிபத்திய எதிர்ப்பும் போராட்டமும்முற்றுமுழுதாக நிறைவேறும் வரையிலும் தொழிலாளி வர்க்கத்திற்கும், தேசிய முதலாளிகளும் இணைந்த சகல ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகள் மத்தியிலும் ஓர் பரந்த ஐக்கியம் ஏற்படுவது அவசியமாகும். எங்கள் நாட்டிலிருந்து ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்களையும் வெளியேற்றி, எங்கள் சுதந்திரத்தை பரிபூரணப்படுத்தும் வரையிலும் சோஷலிஸ சமுதாய அமைப்புப்பற்றி சிந்திப்பதற்கே இடமில்லை

### ஐக்கியமும் போராட்டமும்

ஆனால் அதேநேரத்தில் இந்த அரசாங்கம் முதலாளிகளின் அரசாங்கம். ஆதலால், அடிப்படையில் அது தொழிலாளி வர்க்க விரோதியாகவே இருக்கும் என்பதை தொழிலாளிவர்க்கம் மறந்திவிடக்கூடாது. தன்னைத் தானே சோஷலிஸ அரசாங்கம் என அது நாமம் சூட்டிக்கொள்வதினால் நாம் ஏமாந்து விடக்கூடாது. அண்மையில் இந்த அரசாங்கம் வேலை நிறுத்தங்களை முறியடிக்க மேற்கொண்ட நடவடிக்கைகளும் வேலைநிறுத்தங்களை முறியடிக்க, பொலிசையும் ராணுவத்தையும் பாவித்தமையும், ஜன நாயக உரிமைகளை மறுப்பதும், வேலை நிறுத்தத்தின்போது பத்திரிகைகளை தணிக்கை செய்ததும் வேலை நிறுத்தத்தின்போது பேச்சு வார்த்தைக்கு மறுத்ததும், வெளிநாட்டு ஏகாதிபத்திய ஸ்தாபனங்கள் கொள்ளை லாபத்தை அள்ளிச்செல்வதை தடுக்க முனையாத அதே நேரத்தில் தொழிலாளர்களுக்கு சம்பளஉயர்வுஏற்படுவதைஏற்கத் தயங்குவதும் இவ் அரசாங்கத்தின் முதலாளித்துவ தன்மைகளை நிரூபிக்கின்றது. இதன் உண்மை என்னவெனில் தேசிய முதலாளிகளிடம் நல்லதும் கெட்டதும் சேர்ந்திருக்கின்றது. முற்போக்கும் பிற்போக்கும் சேர்ந்திருக்கின்றது. ஏகாதிபத்திய எதிர்ப்பும் தொழிலாள விரோதப் போக்கும் அமைந்திருக்கின்றது. தொழிலாளி வர்க்கம் இதைக் கவனிக்கவேண்டும். தேசிய முதலாளிவர்க்கத்தின் நல்ல கொள்கைகளை, ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகளை ஆதரிக்க அதோடு ஐக்கியப்பட தன்னைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும். அதனுடைய தொழிலாள விரோதக்கொள்கைகளை, பிற்போக்குத் தன்மைகளை எதிர்க்க, போராட தயாராக இருக்கவேண்டும். இதுதான் ஐக்கியமும் போராட்டமும் என்பதின் செயல்முறையாகும். ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தேசிய முதலாளி வர்க்கம் போராடும் பொழுது நாம் அதோடு ஐக்கியப்படுகிறோம். தொழிலாளிவர்க்கத்தை அது எதிர்க்கும் பொழுது நாம் அதற்கெதிராக போராடுகிறோம்.

தேசிய முதலாளிகளுக்கும் தொழிலாளி வர்க்கத்திற்குமிடையில் ஏற்படும் இந்தஒற்றுமை தற்காலிகமானது - பலமற்றது என்பதையும் நாம் உணர வேண்டும். நிலை திரிகாலத்தில் நாம்வாழ்வதாக காலம்சென்ற எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா அழகான முறையில் கூறுவார். ஆனால் சகல நிலை திரிபுகளுக்கும் ஓர் முடிவுண்டு. சகலகாலமும் அதுதொடர்ந்து மாறிக்கொண்டிருக்கமுடியாது ஒன்றில் நாம் சோஷலிஸ உலகத்தை நோக்கி முன்னேற வேண்டும். அன்றேல் மீண்டும் பயங்கர ஏகாதிபத்திய காலத்திற்கு பின்வாங்க வேண்டும். இந்த இடத்தில்தான் தொழிலாளி வர்க்கம் தனது கடமையைச் செய்ய வேண்டும். தேசிய முதலாளி வர்க்கம் உட்பட சகல ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்திகளுக்கும் சிறந்தமுறையில் தலைமை தாங்குவதின் மூலம் ஏகாதிபத்தியத்தின் மிச்ச சொச்சங்களை துடைத்தெறிவதற்கும் சோஷலிஸப் பாதையிலே நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும் ஓர் தெளிவான கொள்கையின் அடிப்படையிலே ஒற்றுமைப்பட்டு செயலாற்ற முடியும். இதன்மூலமாக 1956ம் ஆண்டில் கிடைத்த, தேர்தல் வெற்றியின்மூலம் திறக்கப்பட்ட புதியபாதையின் பயனை அடைய முடியும்.

பிற்போக்குவாதிகள் இழந்த இடத்தை மீண்டும் அடைய இடம் கொடுக்காத முறையில் இப்போராட்டத்தை எவ்விதம் நடத்துவது. இதுபற்றிபெரும்பாலானதோழர்கள் மத்தியில் ஓர் குழப்ப நிலமை தோன்றியுள்ளது. ஏற்படும் ஒவ்வொரு சூழ்நிலையினதும் போராட்டத்தினதும் அடிப்படையில் இது ஆராயப்படவேண்டியதும் புனராலோசனை செய்யப்பட வேண்டியதொன்றாகும். 1962 ஜனவரியில் பிற்போக்குவாதிகள் ஓர் சதியை நடத்த திட்டமிட்டார்கள். அந்த நேரத்தில் தொழிலாளிவர்க்கம் ஆட்சிக்கு எதிராக நடத்தக்கூடியசகலபோராட்டங்களையும் பின்போடவேண்டியது அவசியம் என்பதில் கருத்து வேறுபாடு இருக்கமுடியாது. அவ்விதம் செய்யவில்லையானால், மறைமுகமாக பிற்போக்கு சக்திகளுக்கு பலன் கிடைக்க நாம் உதவிசெய்தவர்களாவோம். பிற்போக்குவாதிகள் மீண்டும் ஆட்சிக்கு வந்தால் தொழிலாளி வர்க்கத்தின் நிலமை என்ன என்பதுபற்றியும் நாம் உணர்வோம். ஆகவே தேசியமுதலாளிகளின் அரசாங்கத்தின் கீழ் தொழிலாளி வர்க்கம் நடத்தக்கூடிய சகல போராட்டங்களும் பிற்போக்குவாதிகள் மீண்டும் பலத்தைக் கைப்பற்ற இடம் கொடுக்காத அளவில் நடத்தப்படவேண்டும் என்பதில் சந்தேகமில்லை.

யூ. என். பி. மீண்டும் ஆட்சிக்கு வந்துவிடும் என்ற பயம், தொழிலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டிய நேரத்தில் அவ்விதம் செயல்படவிடாது தடுத்து வைக்கும் நிலமையை ஏற்படுத்திவிடக் கூடாது. யூ.என் பி. மீண்டும் ஆட்சிக்கு வராமல் பாதுகாப்பதற்குள்ள சரியான - உண்மையான வழி என்னவெனில், யூ. என். பி. யின் தோல்வியின்மூலம்பெற்ற ஜனநாயக - தொழிற்சங்க உரிமைகளை (இவற்றை இந்த அரசாங்கம் சிறிது சிறிதாக அழித்து வருகிறது) முழுதும் பயன்படுத்தி பயமற்ற முறையில் சக்திமிக்கதாக தொழிலாளி வர்க்கத்தை அதனுடைய கோரிக்கைகளுக்காக அணிதிரட்டுவதேயாகும். எந்த அளவுக்கு தொழிலாள வர்க்கத்தின் இயக்கத்தை சிறப்புற அமைத்து அதன் போராட்ட சக்தியை வளர்க்கிறோமோ அந்த அளவிற்கு மீண்டும் பிற்போக்கு சக்திகள் இந்த நாட்டில் தலையெடுக்காத வண்ணம் பாதுகாக்கமுடியும் என்பதை நாம் உணர வேண்டும்.

அடிப்படையை ஆராய்வோம். நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும் மீண்டும் பழைய நிலைக்குப் போகாமல் பாதுகாப்பதற்கும் எந்த வர்க்கத்தால் முடியும்? நிச்சயமாக அது சுதந்தரகட்சி அரசாங்கமல்ல. தற்காலிகமாக அது சில முற்போக்குத் தன்மை பெற்றதக இருந்தாலும் கூட அது ஒரு யூ. என். பி. யின் வர்க்க உடன்பிறப்பு என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்தக் கடமையை சரிவர நிறைவேற்ற தொழிலாளி வர்க்கத்தாலும் அதன் ஒற்றுமை அணிகளாலும் மாத்திரமே முடியும். புரட்சிகரமான, பிழையற்ற, உறுதியான தொழிலாளிவர்க்க தலைமையினால்தான் இதை பூரணமாக நிறைவேற்ற முடியும். சமுதாயத்தில் அந்த வர்க்கம் மாத்திரமே நெஞ்சுறுதியோடு, விட்டுக்கொடுக்காமல், ஈடாட்டமின்றி ஏகாதிபத்தியத்தையும் அதன் உள்நாட்டு ஆதரவாளர்களையும் எதிர்த்துப் போராடக் கூடியது.

### எமது லட்சியம்

இதற்கு வேறு ஒரு பக்கமும் உண்டு. 1956 ம் ஆண்டிற்குப் பின்பு நாங்கள் பெற்ற புதிய உரிமைகளும், சுதந்திரங்களும் மட்டுமல்ல நாங்கள்பெறவேண்டியவை என்பதைதொழிலாளி வர்க்கம் உணர வேண்டும். சோஷலிஸத்தை அடைவதற்கும், தொழிலாளி வர்க்கத்தின் தலைமையில் அரசாங்கம் அமைப்பதற்கும் நாம் செல்லும் பாதையில் எங்களுக்கு ஓர் உதவியாகவே அவை அமைந்துள்ளன. அந்த இலட்சியத்தை நாம் என்றும் மறந்துவிடக்கூடாது. இன்று சில ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரங்களையும் அனுபவிப்பதின் காரணமாக, யூ. என். பி. மீண்டும்ஆட்சிக்கு வந்துவிடும்என்ற பயத்தினால் செயலற்று இருப்போமேயானால் தொழிலாளரின் போராட்டகாலத்தில் சிறந்த தலைமை கொடுக்க முடியாமல் போகும்என்பதோடு அவர்களுக்கு ஓர் தடையாகவேவிளங்கமுடியும். ஆகவே அதற்கு மாறாக இப்பொழுது நாங்கள் அனுபவிக்கின்ற உரிமைகளையும் சுதந்திரங்களையும் பயன்படுத்தி தொழிலாளி வர்க்கத்தை அணிதிரட்டி முன்னெடுத்துச் செல்லவேண்டும். அதன் மூலம் ஏகாதிபத்திய, நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் பணியினை நிறைவேற்றமுடியும். மேலும், முன்சென்று முதலாளித்துவத்தை முறியடித்து சோஷலிஸ சமுதாய அமைப்பிற்கு வழிகாண முடியும். இல்லையானால் முழு இயக்கமும் ஒரு அடி பின்வாங்க வேண்டி ஏற்படும். அத்தோடு எதைத் தவிர்க்க வேண்டுமென நாமெல்லாம் விரும்புகிறோமோ அதற்கு அதாவது யூ. என். பி, மீண்டும் ஆட்சிக்கு வருவதற்கு இடம் கொடுத்தவர்களாவோம்.

வீட்டிலே நடக்கக் கூடிய சம்பவம்ஒன்று என் நினைவிற்கு வருகிறது. ஒரு முட்டையின் கரு குஞ்சாக உருவெடுப்பதற்கு மூடியுள்ளமுட்டையின் ஓடும் தாய்க் கோழியின் சூடும் அவசியமாகும். ஆனால் முற்றாக உரு வெடுத்த பின்பு தன்னைப் பாதுகாத்த மேல் ஓட்டை உடைப்பது பற்றி முடிவெடுக்க குஞ்சு தாமதம் செய்யுமேயானால் உள்ளுக்குள்ளேயே உயிர்விடவேண்டிஏற்படும். இந்நாட்டு தொழிலாளிவர்க்கத்தையும் நாம் சரியாக அணிதிரட்டி, அவர்களின் முழுச் சக்தியையும் ஆர்வத்தையும் பயன் படுத்தி முன்னெடுத்துச் செல்லவில்லையானால் கோழிக்குஞ்சுக்கு

[5ம் பக்கம் பார்க்கவும்.]

# பழிவாங்கும் போக்கினை எதிர்த்துப் போராடுவோம்

## இ. போ. ச. தொழிலாளர்களின் ஐக்கியம் மேலும் வளரட்டும்.

### இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கப் பொதுக் காரியதரிசியின் வேண்டுகோள்.

**இ. போ. ச. தொழிலாளர்கள் பழிவாங்கப்பட மாட்டார்கள் என பாராளுமன்றத்தில் கனம் தொழில் மற்றும் தேசிய சேவை அமைச்சர் உறுதியளித்தார். ஆனால் இதற்கு எதிர்மாறாக இ. போ. ச. வில் கடமையாற்றும் அற்பமூளை படைத்த உயர் உத்தியோகஸ்தர்கள் சிலர் வேலை நிறுத்தம் செய்தவர்களைப் பெருமளவில் பழி வாங்குவதில் ஈடுபட்டுள்ளனர்.**

இ. போ. ச. வின் உயர் பதவிகளில் முன்னைநாள் பஸ் முதலாளிகளும் கத்தோலிக்க கையாட்களுமாகிய படு பிற்போக்குவாதிகள் ஆரம்பத்திலிருந்தே அமர்ந்திருக்கின்றனர். பழைய எஜமானர்களுக்காக தொழிலாளர்களைப் பழிவாங்க ஆவலோடு துடித்துக் கொண்டிருக்கும் இவர்கள் சகலரும் தொழிலாளிவர்க்கவிரோதிகளாவர் இவர்களுக்கு இரண்டு இலட்சியங்கள் உண்டு. தொழிலாளர்களை நசுக்க இவர்கள் விரும்புகிறார்கள். அதன்மூலம் பஸ் தேசியமயத்தை அவமானப்படுத்தி முறியடிக்கஇவர்கள் முயல்கிறார்கள். இவ்விதசெயல்களின் மூலம் தனிப்பட்டவர்களுக்கு மீண்டும் பஸ் சேவையைத் திருப்பிக் கொடுக்கும்படி கோரிக்கை கிளம்புமென இவர்கள் கருதுகின்றனர்.

#### பிற்போக்குவாதிகள் பழிவாங்கலை நடத்துகிறார்கள்

அரசாங்கம் இன்று கடைப்பிடித்துவரும் தொழிலாள வர்க்க விரோதப் போக்கும், தற்போதைய நிலமையும் இவர்களுக்குப் பெரிதும் உதவியளிக்கிறது. அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. வேலை நிறுத்தக்காரர்களின் தலைவர்களை விரும்பியபடி தண்டிப்பதற்கு அவர்களுக்கு வழி திறந்துவிடப்பட்டுள்ளது. வேலை நிறுத்தம் செய்தவர்களைப்பழிவாங்கும் இக்கொடிய செயல், பழைய பஸ் முதலாளிகளின் அன்புக்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான ஊழியனாக விளங்கிய தலைமை ஒப்பரேசனல் மனேஜரால் நடத்தப்படுகிறது.

தனிப்பட்டஸ்தாபனங்களில் வேலை செய்யும் ஓர் உத்தியோகஸ்தர் இவ்விதமான கேடுகெட்ட செய்கையில் ஈடுபடுவதற்குமுன் சிறிது சிந்தித்திருப்பார். தொழிலாளர்களை விரோதித்து அவர்களுக்கு ஆத்திரமூட்டும் செய்கையில்ஈடுபட்டால் அதன்மூலம் தாங்களே மனம் வருந்தவேண்டி ஏற்படும் என்பதை அந்த உத்தியோகத்தர்கள் நன்கு உணர்வார்கள். ஆகவே அவ்வித 'தற்கொலை' வேலையில்ஈடுபடமாட்டார்கள் ஆனல் இ. போ. ச. விலுள்ள மரமண்டைகள் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படமாட்டார்கள். அவர்களுடைய பணமல்ல இங்கு நாசமாவது. இ. போ. ச. தொழிலாளர்கள் ஒத்துழையாமல் அவ்விஸ்தாபனத்திற்கு நஷ்டமேற்படுமேயானல் அது வரி செலுத்தும் பொது மக்களுக்கு அதாவது உங்களுக்கும் எனக்கும்தான் நஷ்டமாகும். இ. போ. ச. விலுள்ள பெரியமனிதர்கள் இவ்விதம் ஏற்படும் நஷ்டத்தைப்பற்றி கவலைப்படமாட்டார்கள்.

#### வேலையிலிருந்து தடுத்து வைத்தல்

வேலை நிறுத்தம் செய்தவர்களைப்பழிவாங்குவது வெளியாகவும் மறைவாகவும், பலவழிகளில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு டிப்போவிலும் வேலைநிறுத்தம் செய்தவர்கள் பலர் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்கள். இதற்கு அவர்கள் காட்டும் காரணம் வேலைநிறுத்தத்தின்போது சில சம்பவங்களில் (வேலை நிறுத்தங்களின் போது பொதுவாக நடைபெறுவது) இவர்கள் ஈடுபட்டதாகவும், பொலிஸ் பார்த்ததாகவும் கூறப்படுகிறது. வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட வேறுசில தலைவர்களும் வேலையிலிருந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள். ஆனல் இன்றுவரை அவர்களுக்கெதிராக எந்த குற்றப்பத்திரிகையும் தாக்கல்செய்யப்படவில்லை. ரத்மலானை டிப்போவில் போராட்ட ஐக்கிய கமிட்டித் தலைவராக விளங்கிய சாமல் டி. சில்வா, எங்கள் சங்க உபதலைவர் மல்கம் சில்வா ரத்மலானையில் எமது சங்க தலைவர் சி. அபயசேகர ஆகியோரின் நிலமை மேற் கூறிய விதமாகவே உள்ளது.

#### வழிகள் மாற்றம்

பொதுவாக அநேகத் தொழிலாளர்களின் கடமைகளும், வழிகளும் மாற்றப்பட்டும், இடமாற்றம் செய்யப்பட்டும், சில இடங்களில் டிப்போக்களை மூடியும் தொழிலாளர்கள் பழிவாங்கப்பட்டுள்ளனர். இம்முறைதான் அதிகமாக நடைபெற்றுள்ளது. இ. போ. ச. ஏற்பட்டு ஐந்து வருடங்களாகின்றன. இவ்வளவுகாலமும் (அதற்கு முன்பும்) சாரதிகளும் கண்டக்டர்களும் ஒருசில வழிகளில் கடமையாற்றியுள்ளனர். பலருடைய வீடுகள் அண்மையில் இருப்பதினல் இரவில் வேலை செய்துவிட்டு வீட்டிற்குப் போகமுடியும், வசதிக்காக அவ்வழிகளில் வாடகைக்கு வீடுகள் எடுத்தும் தமது பிள்ளைகளை அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கு அனுப்பியுமுள்ளனர். சில வழிகளில் கூடுதலானஓவர்டைம் கிடைக்கும். இவ்வித மாற்றங்களினல் தொழிலாளர்கள் குடும்பங்களைவிட்டுப் பிரிக்கப்பட்டுள்ளனர். இதிலும்பார்க்க கொடிய துன்புறுத்தல் இருக்கமுடியாது. இவற்றை உணர்ந்தால் தொழிலாளர்களுக்கு இழைக்கப்படும் அநீதியை ஓரளவு உணர முடியும்.

வேலை நிறுத்தக்காலங்களில் வேலைசெய்த கருங்காலிகளுக்கு அந்த வழிகளில் வேலை செய்ய அனுமதிப்பதாகதாங்கள் உறுதியளித்துவிட்டதாக இதற்கு இ. போ. ச. சமாதானம் கூறுகிறது. இவ்விதவாக்குறுதியளிக்க இ. போ. ச. வுக்கு அதிகாரம் கிடையாது. பழிவாங்கப்படமாட்டாது என்ற உறுதிமொழிக்கு இது முற்றிலும் மாறுபட்டதாகும். அடுத்ததாக இந்த சமாதானம் ஏற்கமுடியாததொன்றாகும். ஏனெனில் கருங்காலிகள் சிலரிருந்த டிப்போக்களிலும், ஏனைய வழிகளில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு பழைய வழிகள் கொடுக்கப்படவில்லை. தொழிலாளர் பழிவாங்கப்படுகிறார்கள் என்ற எமது குற்றச்சாட்டு இதன் மூலமாகவே நிருபணமாகிறது.

#### தொழிலாளர்கள் எதிர்த்துப் போராடவேண்டும்

இவ் விதபழிவாங்கல்களையும் தொல்லைகளையும் பார்த்துக் கொண்டு தொழிலாளர்கள் மௌனிகளாகமாறிவிடவில்லை பல இடங்களில் தனிப்பட்ட முறையில் திடீர் வேலைநிறுத்தங்கள் நடத்தப்பட்டன. சில இடங்களில் தொழிலாளர்கள் காட்டிய ஒற்றுமை அந்த டிப்போ உத்தியோகஸ்தர்களுக்கு உண்மையை தெரியப்படுத்தியுள்ளது. ஒழுங்கான முறையில் தொழிலாளர்கள் நடந்து கொள்வது அவசியமாகும். இ. போ. ச. 'பெரிய மனிதர்களுக்கு' தகுந்த பாடம் சொல்லிக் கொடுக்கவேண்டியது அவசியமாகும். தொழிலாளர்களைத்தோற்கடித்துவிட்டதாக, தொழிலாளர்கள் தங்கள் வாலைச்சுருட்டிக்கொண்டு மீண்டும் வேலைக்கு வந்துவிட்டதாக சில வேளை அவர்கள் நினைக்கக் கூடும். இவ்விதம் இ. போ. ச. பெரிய மனிதர்கள் எண்ணினல் கட்டாயமாக ஏமாற்றந்தான் அவர்களை எதிர்பார்க்கிறது என்பதுதான் உண்மைபெரியதோர் அதிர்ச்சியைத்தான் அவர்கள் காணப் போகிறார்கள்.

எங்கள் போராட்டம் ஒத்திபோடப்பட்டுள்ளது என்பதை நாம் நன்கு தெளிவுபடுத்த வேண்டும். எங்கள் போராட்டம் முடிந்துவிடவில்லை. வேலை நிறுத்தம் முடிந்தவுடன் எமது கோரிக்கை சம்பந்தமாகபேச்சு வார்த்தை நடைபெறும் என்ற வாக்குறுதியைஅரசாங்கம் நிலைநிறுத்தப்போகிறதாஎன்பதை நாம் இருந்துபார்க்கவேண்டும். நாங்கள் எடுத்துக் கூறியிருப்பதின் காரணமாக, பழிவாங்கும் கொள்கையில் இ. போ. ச. மாற்றம் செய்யப் போகிறதா என்பதையும் நாம் பார்க்கப் போகிறோம்.

இந்த இரண்டு விஷயத்திலும் ஓர் ஏற்கக்கூடிய முடிவு ஏற்படவில்லையானல், மீண்டும் இ. போ. சாவைத்தாக்க, அதற்கு உண்மையில் உணர்வு ஏற்படக்கூடிய முறையில் தாக்க நாம் தயாராக வேண்டும். எமது அணிகளை நாம் நல்ல முறையில் இதற்குத் தயார் செய்து கொள்ளவேண்டும். மேலும் கூடிய ஐக்கியத்தைக் கட்டிவளர்க்கவேண்டும் அத்தோடு எங்கள் போராட்ட ஆயுதத்தையும் நன்குபரிசீலனை செய்து தெரிவுசெய்துகொள்ள வேண்டும்.

#### ஐக்கியத்தைப் பாதுகாருங்கள்

இதன் காரணமாகத்தான் வேலை நிறுத்தத்தின் போது ஏற்பட்ட ஒற்றுமை பாதுகாக்கும்படி, மேலும்சிறப்புறகட்டி வளர்க்கும்படி வேண்டுகிறோம். உங்கள் ஐக்கிய கமிட்டிகளை பாதுகாருங்கள், மேலும் உறுதிப் படுத்துங்கள். பயமுறுத்தலின் மூலமும், தவறான வழியிலும் வேலை நிறுத்தத்தில் பங்கெடுக்க விடாமல் தடுக்கப்பட்டவர்களை எங்கள் அணிக்கு சேர்ப்பதற்கு உங்களான வரையிலும் முயற்சி எடுங்கள். கருங்காலி வேலை செய்ய வேண்டும் என உறுதி பூண்டு, துரோகச் செயலில் ஈடு பட்டவர்களை நாம் இதில் குறிப்பிடவில்லை. அவர்களைத் தனிமைப்படுத்தி மேலும் கருங்காலி வேலைக்கு கனவு கூடக் காணாத நிலைமைக்கு அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும்.

வேலை நிறுத்தத்தில் எங்களோடு சேர்ந்து இறுதிவரையில் எம்மோடு நின்ற சுதந்திரக் கட்சி தொழிற் சங்க அங்கத்தவர்கள் சம்பந்தமாக எங்கள் சங்கம் முக்கியமாக அக்கறை எடுக்க வேண்டும். அவர்கள் இன்று ஆதரவற்ற அனுதைகளாக நிற்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதோடு, விரும்பினல் எங்கள் அணியிலும் சேர்த்துக் கொள்வது எமது சங்கத்தின் கடமையாகும்.

#### ஒருமுனைப் போக்கினை எதிர்ப்போம்.

இவ்விடத்தில் சமஸ்த லங்கா மோட்டார் சேவக சமித்தி கடைப் பிடித்த ஒருமுனைப் போக்கினை நாங்கள் கண்டிக்கிறோம். இப்போராட்டம் மூன்று சங்கங்களினலும் ஆரம்பிக்கப்பட்டு ஆதரவளிக்கப்பட்டது. ஆனல் போராட்டத்தைக் கைவிடுவது சம்பந்தமாக ஏனைய இரு சங்கங்களோடும் இச் சங்கத்தால் உண்மையை உணர்ந்து ஒற்றுமைப்பட முடியவில்லை இது மனவருத்தத்திற்குரியதொன்று. ஆனல் அவர்களின் செயல் கழுத்தறுப்பு வேலையோ, அல்லது ஐக்கிய எதிர்ப்பு செயல் முறையோ அல்ல. உண்மையில் நேர்மையான கருத்து வேறுபாடேயாகும்.

இச்சங்கத்தால் ஒரு சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருந்ததை நாம் பார்த்தோம். அதில் ஏனைய இரு சங்கங்களுக்கு எதிராக கடுமையான வார்த்தைகள் பிரயோகிக்கப்பட்டிருந்தது. வேலை நிறுத்தத்தைக் காட்டிக் கொடுத்து விட்டதாகக்கூட எமக்குமேல் குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது. இநத சங்கத்தினல் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் தலைவர்கள் போராட்டத்தின் முக்கிய காலங்களில் வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தார்கள். இப்படிப்பட்ட சங்கத்தின் வாயிலிருந்து தான் இவ்வித குற்றச் சாட்டுகள் பிறக்கின்றன.

அரசாங்கமும், இ. போ. ச. பெரிய மனிதர்களும், கொடூரமான, பயங்கரமான முறையில் எம்மைத் தாக்கிக்கொண்டிருப்பதை நாம் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த நேரத்தில் எம்மிடையே கூடிய ஒற்றுமைஇருக்கவேண்டியது அவசியமாகும். அவ்வித நேரத்தில் சமஸ்த லங்கா மோட்டார் சேவக சமித்தி தலைமை எடுத்துள்ள ஒற்றுமையைபலவீனப்படுத்தும் போக்குக்கு ஓர் முடிவு கட்டும்படி அச் சங்கத்தின் சாதாரண அங்கத்தவர்களை நாம் வேண்டுகிறோம்.

எங்களிடையே உள்ள சிறிய வேற்றுமைகளை மறப்போம். இ. போ. ச. வில் உள்ள பிற்போக்கை முறியடிக்க எங்கள் இயக்கங்களின் ஒற்றுமையை உறுதிப்படுத்தி சக்திப்படுத்துவோம்.

இ. போ. ச. வில் நடைபெறும் பழிவாங்கல் ஒழிக!

எங்கள் குறைந்தபட்ச ஒன்பது கோரிக்கைகளை வழங்குக!

இ. போ. ச. விலிருந்து பிற்போக்குவாதிகளை வெளியேற்றுக!

---

(4-ம் பக்கத் தொடர்)

நேர்ந்த கதிதான் தொழிலாளி வர்க்கத்திற்கும் ஏற்படும் என்பதை நாம் உணரவேண்டும்.

சுதந்திரக் கட்சி தனது தொழிலாள விரோத மனப்பான்மையை அண்மைக் காலங்களில் நன்கு வெளிக்காட்டியுள்ளது. இந்தச் சவாலை தொழிலாளி வர்க்கம் ஏற்கவேண்டியது அவசியமாகும். மேலும் சிறந்த முறையில் தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுவதும், பல தொழிலாளர்களின் போராட்டங்களை ஒருமுகப் படுத்துவதும், அண்மையில் இ. போ. ச. தொழிலாளர்களின் போராட்டத்தின்போது பல சங்கங்களுக்கும் இடையே ஏற்பட்ட ஒற்றுமையைப் போன்று ஐக்கியத்தை அமைப்பதும் அவசியமாகும். எல்லாவற்றிலும் மேலாக, நாள்தோறும் தோன்றிவரும் தொழிலாளர்களின் போராட்டங்களுக்கு ஐக்கிய தலைமையளிக்கக் கூடிய முறையில் ஓர் குறைந்தபட்ச பொதுத் திட்டத்தின் கீழ் சகல இடதுசாரிக் கட்சிகளும் ஒன்றுபடுவது மிகவும் அவசியமாகும்.

---

## தொழிலாளர்கள் நாட்டின் முதுகெலும்பு.

### இரத்தினபுரி கெடன்தொல தோட்டத்தில் எமது பிரதிநிதி.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை அரசாங்கம் கவனிக்காது, தனக்கு எதிராக சதி செய்ய முனைந்த பொலிஸ், ராணுவத்தை நம்பியிருப்பது தனக்குத்தானே குழிபறிக்கும் பைத்தியக்காரத்தனம் என்பதை அரசாங்கம் உணரவேண்டும் என இரத்தினபுரி கெடன்தொல தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் பேசிய தோழர் தர்மபால பீ. சிரிசேன கூறினர்.

மேலும் அவர் பேசுகையில் தொழிலாளர்கள்தான் நாட்டின் பொருள் உற்பத்தியைப் பெருக்குபவர்கள். அவர்கள் தான் நாட்டின் முதுகெலும்பு என்பதை அரசாங்கம் உணர்ந்து அவர்களுக்கெதிரான செயல்களில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும், இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு அரசாங்க அளவு பஞ்சப்படி கோரி விரைவில் போராட்டம் நடத்தப் போவதாகவும், தோட்டத் தொழிலாளர்களின் உண்மையான சங்கம் எமது செங்கொடிச் சங்கம் எனவும் கூறினர்.

பின்பு கீழ்கண்டோர் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் பீ. ஜீ. குணபால, உப தலைவர் எம். சுப்பிரமணியம், காரியதரிசி கே. தங்கராஜா, உப காரியதரிசி பீ. ஜேமிஸ்சிங்க, தனதிகாரி எம். முத்து, எஸ். எல்பட் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

# இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் புதிய கோரிக்கைகள்

**இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கு சமர்ப்பித்துள்ள கோரிக்கைகளின் விபரம் கீழே தரப்படுகிறது. இது பற்றிய செய்தி முதல் பக்கத்தில் காண்க.**

**(1) அரசாங்க சம்பள திட்டக் கமிஷனின் சிபார்சின் அடிப்படையில் புதிய சம்பள விகிதம்,**

(அ) பயிற்றப்படாத தொழிலாளிக்கு மாதத்திற்கு ரூபா 135/- அல்லது நாளுக்கு ரூபா 5/20

(ஆ) சிறிது பயிற்சி பெற்ற தொழிலாளிக்கு மாதத்திற்கு ரூபா 160/- அல்லது நாளுக்கு ரூபா 6/15

(இ) பயிற்றப்பட்ட தொழிலாளிக்கு ரூபா 210 அல்லது நாளுக்கு ரூபா 8/-

குறிப்பு:- தரம் 1 ஐ சேர்ந்த தொழிலாளர்களுக்கும் நடுத்தர (இண்டர்மீடியட்) தொழிலாளர்களுக்கும் வேறுபட்டஓர் விகிதம் வரையறுக்கப்பட வேண்டும். தேயிலை, றப்பர், தெஃகுப் பொருள் ஏற்றுமதித் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கும், அவ்விதமே.

பயிற்றப்படாத தொழிலாளர்களுக்கு மாதத்திற்கு ரூபா-135/- வழங்கப்பட வேண்டும் என்ற சம்பளத் திட்டக் கமிஷனின் அறிக்கையின் அடிப்படையிலேயே எமது கோரிக்கையை முன்வைக்கிறோம். கீழ்க்காணும் முறையிலேயே இந்த விகிதம் வரையறுக்கப்பட்டுள்ளது.

கடுமையான வேலை செய்யக்கூடிய ஒருவனுக்கு வேண்டிய உணவுப்பட்டியல் ஒன்றை வைத்திய ஆராய்ச்சிக் கழகம் தயாரித்தது. அவ்வித உணவுக்கு ரூபா 1-31 செலவாகுமென குடிசன மதிப்பீட்டு இலாகா கணித்தது. 1958ஆம் ஆண்டிலிருந்த விலைகளின் அடிப்படையிலேயே இக்கணிப்பு எடுக்கப்பட்டது. ஒருநாளைக்கு தனி நபரின் உணவுக்கு ரூபா 1-31 என்ற அடிப்படையில் இரண்டு பேரைக்கொண்ட ஒருகுடும்பத்திற்கு ஏறக்குறைய ரூ. 80/- மாதத்திற்குத் தேவைப்படும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் வருவாயில் சராசரி 60 வீதம் உணவுக்காகச் செலவிடப்படுவதாக குடிசன மதிப்பீட்டு இலாகாவின் புள்ளி விபரக் கணிப்பு எடுத்துக் காட்டுகிறது. இரண்டுபேரைக் கொண்ட ஒரு குடும்பத்திற்கு உணவுக்காக ரூபா 80 செலவிடுவதின்மூலம் சராசரி ஒரு மாதத்திற்கு ரூ 133 மொத்தம் செலவாகும் எனக் கணிக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே ஒருமாதத்தற்கு ஆகக் குறைந்த சபளமாக ரூபா 135 இருக்க வேண்டும் எனக் கமிஷன் சிபார்சுசெய்தது.

சம்பளக் கமிஷன் தனது கணிப்பிற்கு அடிப்படை ஆதாரமாகக் கொண்டவற்றை நாம் முற்று முழுதாக ஏற்கவில்லை. உதாரணத்திற்கு அவர்கள் இரண்டுபேரைக் கொண்ட ஒரு குடும்பத்தையே தமது கவனத்திற்கு எடுத்துள்ளார்கள். ஆனல் எங்களைப்பொறுத்த வரையில், இலங்கையில் சராசரி 3-பேரைக் கொண்ட குடும்பங்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். இவ்வேறுபாடுகள் இருப்பினும்கூட அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட கமிஷன் என்பதனுல் அதன் சிபார்சின் அடிப்படையிலேயே எமது கோரிக்கையை முன்வைக்கிறோம்.

1959 ஏப்ரல் மாதத்தில் ஏற்பட்டகூட்டு ஒப்பந்தத்திற்குப் பின் பல மாறுதல்கள் ஏற்பட்டிருப்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். ஆகவே கூட்டு ஒப்பந்தத்தில் திருத்தம் கோருவது நீதியானதாகும்.

ஏற்பட்ட மாற்றங்களாவன :

(அ) முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இலங்கை வர்த்தக ஊழியர் சங்கத்திற்கும் இடையில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் இரண்டு வருடாந்த சம்பள உயர்விற்கு சமமான சம்பள உயர்வுஎழுதுவினைஞர்களுக்குக் கிடைத்துள்ளது.

(ஆ) வங்கி தகராறிலும் தீர்ப்பின்படி இரண்டு வருடாந்த சம்பள உயர்வுக்குச் சமமான சம்பளஉயர்வுகிடைத்துள்ளது

(இ) 1959 ஏப்ரலுக்குப்பின் வாழ்க்கைச் செலவு கூடிக்கொண்டேயிருக்கிறது. ஆனல் ஒப்பந்த அடிப்படையில் வளங்கப்படும் பஞ்சப்படியில் எவ்வித மாறுதலும் அதனுல் ஏற்படவில்லை. அதற்குக் காரணம்அப்பஞ்சப்படி அன்றைய நிலைக்கேற்ப நிர்ணயிக்கப்பட்டதாகும்.

**(2) தற்போதைய 15சம்பள உயர்வை 20 ஆக உயர்த்துதல் வேண்டும்.**

கனகரத்தினவின் தீர்ப்புப்படியும், வங்கி தீர்ப்பின்படியும் அத்தீர்ப்புக்குள் அடங்கிய ஊழியர்களுக்கு 30 வருடாந்த சம்பள உயர்வு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே தொழிலாளர்கள் மட்டும் 15 சம்பள உயர்வு மாத்திரம் பெறவேண்டும் என்பது நீதியற்றது.

**(3) ஒரு கிழமையில் 6 நாள் வேலை செய்யும் தொழிலாளிக்கு 7 நாள் சம்பளம் வழங்க வேண்டும்.**

நல்ல வரவுக்கு வழங்கும் அன்பளிப்பாக இது வழங்கப்படவேண்டும். கிரமமாக தொழிலாளர்கள் வேலைக்கு வருவதில்லையென முதலாளிமார் குறைகூறுகிறார்கள். இக் கோரிக்கையை வழங்குவதின் மூலம் உற்சாகத்தோடு தொழிலாளர்கள் கிரமமாக வேலைக்கு வருவார்கள். அத்தோடு உற்பத்தியும் அதிகரிக்கும். அதனுல் முதலாளிக்கும் நன்மை கிடைக்கும்.

**(4) ஒரு வருடத்திற்கு ஒரு மாத விடுமுறை, இரண்டு வருடத்திற்கு ஒரு முறை சேர்த்து எடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.**

தேசிய ஊழிய கொள்கைக் குழுவினுல் சிபார்சு செய்யப்பட்டவைகளில் இது ஒன்றாகும். எழுதுவினைஞர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் விடுமுறை வழங்குவதில் வேறுபாடு இருப்பதை நாங்கள் எக்காரணத்தைக் கொண்டும் .. விரும்பவில்லை.

**(5) விபத்து ஏற்படின் அந்த விபத்து ஏற்பட்ட முதல் நாளிலிருந்து முழுச் சம்பளம் வழங்க வேண்டும்.**

விபத்து ஏற்படின் இறுதி நாட்களிலும் பார்க்க ஆரம்ப நாட்களில் தான் தொழிலாளிக்கு அதிகமாக வைத்தியசிகிச்சைக்காக பணம் தேவைப்படுகிறது, ஒரு சிலரைத் தண்டிப்பதற்காக நேர்மையான தொழிலாளர்களைப்பழிவாங்குவது முறையற்றதாகும்.

**(6) பிராவிடன் நிதிக்குமுதலாளிகளின் பங்கு 10 வீதமாக உயரவேண்டும்.**

தற்பொழுது முதலாளிகளினுல் பிராவிடன் நிதிக்கு வழங்கப்படும் பங்கின் மூலம் ஒரு தொழிலாளி தனது சேவையின் இறுதிக் காலத்தில் ஒரு கணிசமான தொகையைப் பெற முடியாமலிருக்கிறது. ஆதலால் முதலாளியின் பங்கு 10 வீதமாக உயரவேண்டுமெனக்கோருகிறோம். நிச்சயமாக தொழிலாளர்கள் ஏற்றமுறையில் தமது பங்கைச் செலுத்துவார்கள் என்பது திண்ணம்.

**(7) காசுவல் விடுமுறை 7 நாளாக உயர்த்தப்பட வேண்டும்.**

தேசிய ஊழிய கொள்கைக் குழுவின் சிபார்சுகளில் இதுவும் ஒன்று.

**(8)தொழிலாளர்கள் மாதாமாதம் செலுத்தக்கூடிய முறையில் ஓர் கடனுதவித் திட்டத்தை முதலாளிமார் ஏற்படுத்த வேண்டும்.**

தொழிலாளர் பிராவிடன் நிதித் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து சகல பிராவிடன் நிதிப் பணமும் அரசாங்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அதன் பின்பு முதலாளிமார்களிடம் தொழிலாளர்கள் கடனுதவி கேட்ட பொழுதெல்லாம் அது பறுக்கப்பட்டு வந்துள்ளது. அவ்வித கடன் வழங்குவதற்கு தங்களிடம் எவ்வித பாதுகாப்பும் இல்லையென்பதே மறுப்பதற்குக் காரணமாக முதலாளிமார்கள் காட்டுகிறார்கள். இதை எங்களால் புரிந்து கொள்ள முடியும்.

இதன் காரணமாக நாங்கள் ஒரு ஆலோசனையைக் கூற விரும்புகிறோம். தற்பொழுது லிப்டன்ஸ் லிமிட்டட்டில் நடைபெறுவதைப்போல சகல முதலாளிகளும் ஓர் கடனுதவித்திட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். அத்தொகைக்கு முதலாளிகளே முதலில் கணிசமான தொகையை முதலாக இடவேண்டும். பின்பு கொஞ்சம் கொஞ்சமாக திருப்பி எடுக்க முடியும். ஒரு குறிப்பிட்ட தொகையை ஒவ்வொரு தொழிலாளியின் சம்பளத்திலிருந்து கழித்து எடுக்க வேண்டும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு சில சட்ட திட்டங்களை இயற்றலாம் அத்தோடு அதைப் பரிபாலிப்பதற்கு தொழிலாளர்களைக் கொண்ட, வேண்டுமாயின் முதலாளிகளின் பிரதிநிதி ஒருவரின் தலைமையில் ஓர் செயற்குழுவை அமைக்கலாம்.

பெரும்பாலான தொழிலாளர்களால் பணத்தை சேமிக்க முடிவதில்லை. ஏதாவது ஓர் அவசர காலத்திலோ, சுகயீன நேரத்திலோ ஒரு கணிசமான பணத்தைப் பெறுவது முடியாத காரியமாக அவர்களுக்குத் தென்படுகிறது என்பதை நாம் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

தோட்ட ஊழியர்களுக்கு தோட்ட முதலாளிகள் சங்கம் ஏற்படுத்தியிருப்பதைப்போல, இலங்கை முதலாளிமார் சங்க அங்கத்தவர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து இவ்வித திட்டம் ஒன்றை ஒரேமுகமாக ஏற்படுத்துவார்களேயானுல் அதன் மூலம் இத்திட்டத்தின் நோக்கங்களும் பெருகும், தொழிலாளர்கள் அடைகின்ற நன்மைகளும் அதிகரிக்கும்.

**(9) வெளியூர்களுக்கு வேலைக்குச் செல்பவர்களுக்கு கூடிய பட்டா வழங்கப்பட வேண்டும்.**

கூடுதல் ஊதியம் வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலேயே இது கேட்கப்படுகிறது.

**(10) எல்லா ஸ்தாபனங்களிலும், சிற்றுண்டிச் சாலை, பொழுது போக்கு வசதிகள் அமைக்கப்பட வேண்டும்**

ஒரு சில ஸ்தாபனங்களைத் தவிர, ஏனைய ஸ்தாபனங்களில் தொழிலாளர் வசதியான முறையில் உணவருந்துவதற்கு வசதிகளில்லை. இடைவேளையின் போது தொழிலாளர்பொழுது போக்குவதற்கு கரம், செஸ் பலகைகளும்கிடையாது. மிகச் சொற்ப செலவிலேயே இக் கோரிக்கையை நிறைவேற்ற முடியும்.

**(11) காச நோயாளருக்கு சுகயீனமுற்றிருக்கும் காலத்திற்கு முழுச் சம்பளம் வழங்க வேண்டும்.**

இந்த கோரிக்கையின் அவசியத்தை விளக்க வேண்டியதில்லை.

**(12) சம்பளப் புத்தகத்திலிருந்தே சங்க சந்தா கழிக்கப்பட வேண்டும்.**

இலங்கை முதலாளிமார் சங்கத்திலிருக்கும் சில அங்கத்தவ ஸ்தாபனங்களினுல், உதா:- கொழும்பு காஸ் கொம்பனி லிமிடெட், ஏ. புவார் அன் கொம்பனி லிமிடெட் போன்றவைகளில் இது நடைமுறையிலுள்ளது. இது பொருளாதாரக் கோரிக்கையல்ல. இக் கோரிக்கையை வழங்குவதின் மூலம் தொழிற்சங்கத்தின் நல்லெண்ணத்தைப் பெருமளவில் பெறமுடியும்.

**(13) தொழிற்சாலைக் குழு உறுப்பினர்களுக்கு ஸ்தாபனங்களில் நடைபெறும் விசாரணைகளில் பங்கு பற்ற உரிமை வேண்டும்.**

சகல தகராறுகளிலும் ஆரம்ப பேச்சு வார்த்தைகளிலேயே தொழிலாளர் பிரதிநிதித்துவம் பெறுவது அவசியமாகும்,

**(14) வேலையிலிருந்து தடுத்துவைக்கப்படும் காலங்களுக்கு தொழிலாளர்களுக்கு அரைச் சம்பளம் கொடுக்க வேண்டும்.**

விசாரணைக்காக வேலையிலிருந்து தடுத்து வைக்கப்படும் சில தொழிலாளர்கள் விசாரணை நடைபெறுவதற்கு காலம் கடத்தப்படுவதினுல் சிலவேளைகளில் நெடுங்காலம் வேலையின்றியிருக்கிறார்கள். கடைசித் தீர்ப்பு வழங்கப்படும் காலத்தில் இது அதிகமாக கவனிக்கப்படுவதில்லை. ஆதலால் வேலையிலிருந்து தடுத்து வைக்கப்படும் காலத்தில் தொழிலாளர்கள் படும் கஷ்டத்தை பெருமளவில் குறைக்க அரைச் சம்பளம் பெரிதும் உதவிசெய்யும்.

**(15) பிராவிடன் நிதிக்கு முற்பட்ட காலத்திற்கு ஒரு வருட சேவைக்கு ஒரு மாதச் சம்பளம் வீதம் வழங்கப்பட வேண்டும்.**

பிராவிடன் நிதித் திட்டத்திற்கு முற்பட்ட காலத்திற்கு எவ்வித நிதியுதவியும் கிடையாது. 1958-ம் ஆண்டிற்குப் பிற்பட்ட காலத்திற்கு தொழிலாளிக்கு பிராவிடன் நிதிஉதவி செய்கிறது. ஆதலால் பிராவிடன் நிதிக்கு முற்பட்ட காலத்திற்கு ஒரு வருட சேவைக்கு ஒரு மாதச் சம்பளம் வீதம் வழங்கப்பட வேண்டும்.

## பாரிஸ் கம்யூன் தினம்

உலக தொழிலாளி வர்க்க சரித்திரத்தில் முதல் முறையாக தொழிலாளர்கள் புரட்சியின் மூலம் தமது அரசாங்கத்தை ஏற்படுத்த முனைந்த ''பாரிஸ் கம்யூன் தினம்'' இம் மாதம் (மார்ச்) 18ம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத் தலைமைக் காரியாலயத்தில் (123 யூனியன் பிளேஸ் கொழும்பு 2.) கொண்டாடப்படும்.

அத்தருணம் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனப் பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

அனைவரும் திரண்டு வருக!

குறைந்த விலையில் சிறந்த கண்கவர்

**கன்வஸ் லெதர் பாக்ஸ், றேந்தைகள், பட்டன்கள், பெனியன், சேட் வகைகளும்**

**பட்டு, பருத்தி, பெனரிஸ், பெங்களூர், மைசூர் சேலைகளும், பட்டு வேட்டி சால்வைகளும்**

பெற்றுக்கொள்ளலாம்.

**எஸ். ரி. நாகலிங்கம் அன் கோ.,**

101, 102, 103, கந்தரோடை றேட், சுன்னுகம்.

முதலீடு: S. T. N. நாகரத்தினம் அன் பிறதர்ஸ்.

தந்தி: எஸ்டியென்கோ ஸ்தாபிதம்; 1910

# "கம்யூனிஸம் தூக்குமேடைக்கு அஞ்சாது"

## ஈராக்கில் புதிய ஆட்சியின் போக்கு என்ன?

**பிப்ரவரி 8ம் திகதி ஈராக் நாட்டில் காசிம் ஆட்சிக்கு எதிராக சதி நடத்தப்பட்டது. அதில் காசிம் கொல்லப்பட்டார். புதிய ஆட்சி நிறுவப்பட்டது. அதன் பின் உலக மக்களின் கவனத்தை ஈராக் நாடு வெகுவாகத் தனது பக்கம் திருப்பியுள்ளது.**

பலர் கொல்லப்பட்டதாகவும் அனேகர் சிறையிலடைக்கப்பட்டுள்ளதாகவும் பத்திரிகைகளில் செய்தி வெளியாகிய வண்ணமிருக்கின்றது. ஈராக் ராணுவமும் பொலிசும் திடீர் திடீரென இடங்களைச் சோதனையிட்டும், பலரைக் கைது செய்தும், சிலரைக் கொன்றும் வருகின்றனர். நாடு பூராவும் வடக்கிலிருந்து தெற்கு வரை பொதுமக்களுக்கும் புதிய ஆட்சியின் பொலிஸ் ராணுவப் படைகளுக்குமிடையில் பெரும் மோதல்கள் நடைபெற்று வருகின்றன. அதிலும் முக்கியமாக கம்யூனிஸ்ட்டுகளை ஈவிரக்கமின்றி கண்ட இடங்களிலேயே அழிக்குமாறு பாக்தாத் வானொலி அறிவித்துள்ளது. கம்யூனிஸ்டுகளுக்கு இரக்கம் காட்டுபவர்கள், மறைவிடம் கொடுப்பவர்கள் சுட்டுக்கொல்லப்படுவார்கள் என ஈராக் மகாதேசாதிபதி அறிவித்துள்ளார்.

கைது செய்யப்படுபவர்களிலும், கொலை செய்யப்படுபவர்களிலும் பெரும்பாலோர் கம்யூனிஸ்ட்டுகளும், சமாதான இயக்கத்தலைவர்களும்தொழிற் சங்கத் தலைவர்கள் போன்ற சிறந்த தேசாபிமானிகளாவர். இவ்வித நடவடிக்கைகளின் மூலம் தேசிய உணர்வுமிக்க சக்திகளை அழித் தொழிக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இந்திய நிருபர் ஒருவரின் கூற்றுப்படி 2500க்கு அதிகமானோர் இன்றுவரை (பெப்ரவரி 21ம் தேதி) கொலை செய்யப்பட்டுள்ளனர். 8000க்கு அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வேறு ஒரு நிருபர் தெரிவிக்கிறார். இவ்விதம் ஈராக் நாட்டில் உண்மையான தேசியப் பற்றுக்கொண்டு ஈராக் நாட்டின் விடுதலைக்காக பல ஆண்டுகளாக பாடுபட்டவர்களின், ஏகாதிபத்திய காலனி ஆதிக்கக் காரர்களை எதிர்த்துப் போராடியவர்களின் உயிர்கள் ஆபத்தான நிலையில் இருக்கின்றன.

### 1958-ம் ஆண்டு புரட்சி.

மற்றைய நாடுகளில் உள்ள கம்யூனிஸ்ட்டுகளைப் போன்று ஈராக் கம்யூனிஸ்ட்டுகளும் தேசிய விடுதலைப் போராட்டங்களில் மாபெரும் தியாகங்களை ஆற்றியுள்ளனர். 1958-ம் ஆண்டு ஜூலை மாதம் அந்த நாட்டிலிருந்த ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து கம்யூனிஸ்டுகள், ஏகாதிபத்திய முடியாட்சியை முறியடித்தனர். 1958ம் ஆண்டு ஜூலை 14ம் திகதிப் புரட்சிமூலம் எதிர்காலத்தைப் பற்றிய நல்ல நம்பிக்கையையும் உறுதியையும் ஈராக் பொது மக்கள் பெற்றனர். அந்தப் புரட்சியின் மூலம் மேற்கத்திய ஏகாதிபத்திய வாதிகளின் சதி முறியடிக்கப்பட்டது. பக்தாத் ஒப்பந்தம் என்னும் மேற்கத்திய வலையில் விழாமல் ஈராக் நாடு அப்பொழுது தப்ப முடிந்தது. தனது உலகத் தொடர்பை சகல நாட்டு மக்களோடும் விரிவு படுத்தியது. காசிமின் தலைமையில் புதிய ஆட்சி ஏற்பட்டது.

புரட்சியின் பின்பும் கம்யூனிஸ்ட்டுகள் ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சியின் இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கும் தேசாபிமானிகளின் உண்மையான ஒற்றுமைக்கும், பரிபூரண சுதந்திரத்திற்காகவும், ஈராக் மக்களின் முக்கிய நன்மைகளைப் பாதுகாப்பதற்காகவும் தொடர்ந்து போராடி வந்தனர். 1958-ம் ஆண்டு புரட்சி நடைபெற்ற பொழுது பிரிட்டன் தனது படைகளை அண்மையிலுள்ள ஜோடானிலும், அமெரிக்கா தனது படைகளை லெபனன் நாட்டிலும் கொண்டுவந்து குவித்து மக்களால் வெறுத்து விரட்டப்பட்ட நூரிஸ் செய்ட்கு ஆதரவளிக்க முனைந்தனர். ஆனுல் உலக மக்களினதும் ஈராக் தேசாபிமானிகளினதும் ஐக்கியக் குரல் அவர்களை அன்று தடுத்து வைத்தது.

### காசிம் செய்த தவறுகள்

புரட்சி வெற்றி பெற்ற ஒரு வருடத்தில் காசிம் தனது புரட்சிக்கால நண்பர்களை மறந்து சர்வாதிகாரப் போக்கில் ஈடுபட்டார். தொழிற் சங்கங்களுக்கும், மாணவர் இயக்கங்களுக்கும், புதிய தடைகளை விதித்தார். நேர்மையான, சிறந்த தேசாபிமானிகளைப் பதவிகளிலிருந்து நீக்கினுர். கம்யூனிஸ்ட் கட்சிக்கும் சட்டரீதியாக அனுமதி வழங்க மறுத்தார். அதன் பத்திரிகை தடைசெய்யப்பட்டது. அத்தோடு காசிம் தேசிய சிறுபான்மை மக்களின், குருடிஸ் மக்களின் உரிமைகளை ஏற்க மறுத்தார். 1961ம் ஆண்டிலிருந்து அவர்களுக்கு எதிராக வெட்கக்கேடான முறையில் ராணுவத்தை ஏவிவிட்டு பல கிராமங்களை அழித்தும், பல ஆயிரம் குருடிஸ் மக்களைக் கொன்றும் வந்தார்.

இதற்கெதிராக கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகப் போராடி வந்தது. குருடிஸ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக எதிர்ப்புத்தெரிவித்து பல லட்சம் கையெழுத்துக்களைச் சேகரித்தது. இவ்வித நிர்ப்பந்தங்களின் காரணமாக 1962ம் ஆண்டு முடிவில் காசிம் ஆட்சியில் ஓர் மாற்றத்தைக் காண முடிந்தது. கைது செய்யப்பட்ட குருடிஸ் மக்களுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது.

இந்த நேரத்தில்தான் காசிமின் ஆட்சிக்கு எதிராக சதி நடைபெற்றது. இவ்விதம் நாட்டில் ஜனநாயக சுதந்திர அபிமானிகள் மத்தியில் பிளவு ஏற்பட்டுள்ளது, தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய வாதிகளுக்குத்தான் நல்ல சந்தர்ப்பத்தை அளிக்கும்.

### யார் வரவேற்கிறுர்கள்

புதிய ஆட்சி அமெரிக்காவில் பெரும் உற்சாகத்தோடு வரவேற்கப்பட்டது. பிரிட்டனும் தன்னுடைய சந்தோஷத்தை மிகவும் கவனமாக, அமைதியாக வெளியிட்டனர்.

ஆனுல் ஈராக்கில் ஏற்பட்டுள்ள நிலமை ஆசிய-ஆபிரிக்க நாடுகளில் கவலையைக் கிளப்பியுள்ளது. தொடர்ந்து பயங்கரக் கொலைகள் நடைபெறுமானுல், வெளிநாட்டுப் பிற்போக்குவாதிகள் தலையிட இடம்கொடுக்குமெனஇந்தியப் பத்திரிகை (லிங்) கருத்து தெரிவித்துள்ளது.

பிரிட்டனிலுள்ள ஈராக் மாணவர்களும் பிரான்ஸ் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் நாட்டுப் பத்திரிகையும் (பிராவ்டா) நடைபெற்றுவரும் படுகொலைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் நாட்டிலுள்ள ஈராக் மாணவர்கள் தமது நாட்டில் நடைபெற்றுவரும் அக்கிரமங்களுக்கு, ஜனநாயக விரோதப் போக்குக்கு எதிராக குரல் எழுப்பவேண்டும் என உலகமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஈராக் தனது வாழ்க்கையில் ஓர் துன்பம் நிறைந்த அத்தியாயத்தை இப்பொழுதடைந்துள்ளது. ஆனுல் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் பயங்கர வெறியாட்டமும், கம்யூனிஸ்ட் விரோத நடவடிக்கைகளும் முடிவில் தோல்வியைத்தான் தழுவும் என்பது வரலாறுதரும் படிப்பினையாகும். பிற்போக்குவாதிகளின் பாதகச்செயல்களை முறியடிக்க ஈராக் மக்கள் என்றும் பின் வாங்க மாட்டார்கள். 1949ம் ஆண்டில் தூக்குமேடை ஏறிய ஈராக் கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக் காரியதரிசி யூசூப் பகீட் அவர்களின் "கம்யூனிஸமும் தூக்குமேடைக்கு அஞ்சாது" என்ற அமரமொழி ஈராக் கம்யூனிஸ்டுகளுக்கு வழிகாட்டும். ஈராக் மக்கள் ஒற்றுமை மூலம் இன்பம் காண்பார்களாக.

**கரவைக் கந்தசாமி**

# மட்டுநகரில் நம் மகத்தான பணி

## செங்கொடியின் கீழ் தொழிலாளர்கள் நல்வாழ்வு காண்கிறுர்கள்.

**1949-ம் ஆணடு ஸ்தாபிக்கப்பட்ட மட்டக்களப்பு சி. டி யூ. எப். செய்துள்ள சேவைகள் இலங்கைத் தொழிலாளர் அனைவரும் அறிந்ததாகும்.**


1950-ம் ஆண்டில் மட்டக்களப்பு, மாந்தீவிலுள்ள குஷ்டரோக ஆஸ்பத்திரியில் கடமையாற்றி வந்த கக்கூஸ் தொழிலாளி முனியாண்டி அநீதியாக வேலை நீக்கம் செய்யப்பட்டபோது அதை எதிர்த்து ஒரு வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி அவருக்கு மீண்டும் வேலை பெற்றுக் கொடுத்தது சி. டி. யூ. எப்.

இதனுல் தொழிற் சங்க கூட்டு முயற்சியின் பலனை உணர்ந்த தொழிலாளர்கள் சங்கத்தில் அணி திரள முற்பட்டனர். மட்டக்களப்பு தச்சுத் தொழிற்சாலையை மூட 1953ம் ஆண்டில் யூ. என். பி. அரசாங்கம் செய்த முயற்சியை தச்சுத் தொழிலாளர்கள் சி. டி. யூ எப். தலைமையில் 24 நாட்கள் தொழிற் சாலைக்குள்ளிருந்து வேலை நிறுத்தம் செய்து முறியடித்தனர். அன்று யூ. என். பி. அரசாங்கத்தையும், பிரதமர் சர். ஜோன் கொத்தலாவலையையும் பணிய வைத்த சி.டி.யூ.எப். இன்றைய ஸ்ரீ லங்கா அரசாங்கமும் அத் தொழிற் சாலையை மூட எத்தனித்த பொழுது ஆட்சேபம் தெரிவித்து வெற்றி கண்டுள்ளது. தோழர்கள் என். சண்முகதாஸன், எம்.ஜி. மென்டிஸ் ஆகியோர் மந்திரிமார்களுடன்பேட்டி கண்டதன் விளைவாக இரண்டாம் முறையும் தொழிற்சாலை மூடப்படுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

1953-ம் ஆண்டு ஹர்த்தால் போராட்டத்தில் சி. டி. யூ. எப். தலைமையில் மட்டக்களப்பு தொழிலாளர்கள் பூரண ஹர்த்தால் அனுஷ்டித்தனர். ஹர்த்தால் நடத்தியதற்காக சி டி. யூ. எப். பிரதிநிதி மிருகத்தனமாகக் காடையர்களால் தாக்கப்பட்டும், பல தொழிலாளர்கள் இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டும், தொழிலாளர்கள் சளையாது போராட்டம் நடத்தினர்.

அர்பன் சபை (U.C.) தொழிலாளர்கள் போராட்டம் மூலம் பெற்ற வெற்றிகள் தொழிற் சங்க ரீதியில் சமூக சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தன.

1956'57 கிழக்கு இலங்கை பஸ் தொழிலாளர் வேலைநிறுத்தம் முதலாளிமார்களால் காடையர்களை ஏவிவிட்டுப்பலாத்காரமாக முறியடிக்கப்பட்டது. அப்பொழுதும் வேலைநீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு தொழிற்கோட்டுமூலம் வேலையும் சம்பளமும் பெற்றுக் கொடுத்தது. அவர்கள் இன்று சி. டி யூ.எப். உடன் இணைந்த இலங்கை மோட்டார் தொழிலாளர் சங்கத்தில் அணி திரண்டுள்ளனர்.



எமது சம்மேளன மட்டக்களப்பு மாவட்ட பிரதிநிதி தோழர்
கே. வி. கிருஷ்ணக்குட்டி

கிழக்கிலங்கையில் மதுவிலக்கின் பயனுக வேலையிழந்த 1000த்திற்கு மேற்பட்ட தொழிலாளர்களுக்கு தமிழரசுக் கட்சி பாராளுமன்ற பிரதிநிதிகளாலும் செய்யமுடியாமற் போன உதவியை, பாணி இறக்கும் லைசென்ஸ் பெற்றுக் கொடுத்ததின்மூலம் செய்த பெருமை சி. டி. யு. எப். பைச் சார்ந்தது.

மட்டக்களப்பு இந்தியன் ஹ்யூம் பைப் கம்பெனி, இஞ்ஜினியரிங் தொழிலாளர்களுக்கு அரசாங்க விகிதப்படி சம்பளம் பெற்றுக் கொடுத்துஅவர்களின் நல்வாழ்வுக்கு வழி வகுத்ததையிட்டு சி. டி. யூ. எப். பெருமை கொள்கிறது.

கிழக்கிலங்கை ஐக்கிய சமாஜத்தை சேர்ந்த டிரைக்டர் ஸ்டேசன் தொழிலாளர்கள் வேலை நீக்கத்திற்கெதிராக சி. டி. யூ. எப். தொழிற்கோட்டில் வழக்காடி வெற்றி பெற்றது. நிர்வாகம் தொழில்கோர்ட் தீர்ப்பிற் கெதிராக சுப்ரீம்(பெரிய)கோர்ட்டிற்கு அப்பீல்செய்துள்ளது. அங்கும் போராட சி. டி. யூ எப். தயாராக உள்ளது.

தொடர்ந்தும் மட்டக்களப்பு தொழிலாளர்கள் அனைவரையும் அணிதிரட்டி அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க சி. டி. யூ. எப். சளையாது போராடி வரும்!

## கொரியா தொழிலாளர்கள் எம்மை ஆதரிக்கிறுர்கள் !

அமெரிக்கா எமது நாட்டிற்கு தந்துவந்த உதவியை நிறுத்தியதைக் கண்டித்தும், எமது சுதந்திரத்தில் தலையிட முனையும் அமெரிக்க போக்குக்கு எதிராக ஈழ தொழிலாள வர்க்கமும் பொதுமக்களும் நடத்தி வரும் போராட்டத்திற்கு ஆதரவுதெரிவித்தும்மக்கள்கோரிய (வட கொரியா) தொழிற்சங்க சம்மேளன மத்திய செயற்குழு எமது இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்திற்கு ஓர் தந்திச் செய்தியை அனுப்பியுள்ளது அதன் சுருக்கத்தைக் கீழே தமிழில் தருகிறேம்.

" அமெரிக்காவின் செயல், ஏகாதிபத்தியங்கள் உதவியின் பெயரில் ஏனைய நாடுகளின் அரசியல் பொருளாதார சுதந்திரத்தில் தலையிட்டு அவற்றை தமக்கு அடிமைப்படுத்த முனைகின்ற திரைமறைவு நாடகத்தை அம்பலமாக்கியுள்ளது. அமெரிக்க அரசாங்கத்தின் நிர்ப்பந்தத்திற்குஇடம்கொடுக்காமல் இலங்கை அரசாங்கம் நடந்துகொண்டது தனது சுதந்திரத்தையும் தன்மானத்தையும் பாதுகாக்கும் செயலாகும். அமெரிக்க ஏகாதிபத்திய சூழ்ச்சிக்கு எதிராக எழுந்துள்ள இலங்கைத்தொழிலாளர் வர்க்கத்திற்கும் பொதுமக்களுக்கும் 'கொரியாதொழிலாளிவர்க்கம் தம்து வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவிப்பதோடு, அமெரிக்க அரசாங்கத்தின் இலங்கையின் சுதந்திரத்தில் தலையிட முனையும் பிழையான போக்கையும் கண்டிக்கிறது" எனக் குறிப்பிட்டுள்ளது.

## "தொழிலாளி"

"தொழிலாளி" பத்திரிகை ஒவ்வொரு மாதமும் முதல் திகதி வெளிவரும் !

தொழிலாளிப் பத்திரிகை தேவையான ஒவ்வொரு தோழர்களும் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு தனிப்பிரதியின் விலை சதம் - 10.

"தொழிலாளி" விற்பனை செய்ய விரும்புவோர் முன்பணம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். பத்திரிகை வேண்டியவர்கள் இம் மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக வேண்டிய பிரதிகளின் தொகையை அறிவியுங்கள்.

முகவரி :-
நிர்வாகி,
" தொழிலாளி "
123, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

# தோட்ட வீடுகளை துண்டுபோட சுப்பிரிண்டனுக்கு முடியுமா?

## அநீதியை எதிர்த்து செங்கொடிச் சங்கம் போராடுகிறது.

**தோட்ட வீடுகளைத் துண்டு போடவும், ஒரு வீட்டில் இரண்டு குடும்பங்களை வசிக்கும்படி நிர்ப்பந்திக்கவும் தோட்ட சுப்பிரிண்டனுக்கு அதிகாரம் உண்டா என்ற கேள்வி அண்மையில் கண்டி தொழில் விசாரணை மன்றத்தில் விவாதிக்கப்பட்டது.**

தலவாக்கலையிலுள்ள கொலிறூட் தோட்ட தொழிலாளி வீ. பாலையா சிறிது காலத்திற்கு முன் வேலைநீக்கம் செய்யப்பட்டார். அவ் வேலைநீக்கம் சம்பந்தமான விசாரணையின் போது இப் பிரச்சினை விவாதிக்கப்பட்டது. பாலையாவும் அவரது மனைவியும் 14. 16. ஒரு வயதுள்ள மூன்று குழந்தைகளும் ஒரு தோட்ட [லயன்] வீட்டின் ஒருபகுதியில் வாழ்ந்து வந்தனர். மற்றப்பகுதியில் வேறு ஒரு குடும்பம் வாழ்ந்து வந்தது.

1961 மே 28ஆம் தேதிமட்டில் மற்றப்பகுதியில் வசித்த குடும்பம் வேறு லயனுக்குச் சென்றது. மற்றக் குடும்பம் வேறு வீட்டிற்குச் சென்றதும் முழு வீட்டையும் தருவதாக முன்பிருந்த சுப்பிரின்டன் கூறியது பாலையாவின் நினைவிற்கு வந்தது. ஆகவே வீட்டை இரண்டாகப் பிரித்திருந்த தடையை பாலையா அகற்றிவிட்டு முழுவீட்டையும் உபயோகித்தார்.

புது சுப்பிரிண்டனுக்கு இது அறிவிக்கப்பட்டது. உடனே அவர் பாலையாவை வேலையிலிருந்து தடுத்ததோடு, முன்பிருந்த பாதிவீட்டிற்கு செல்லும்படி வற்புறுத்தினர் பாலையா புதிய உத்தரவுக்குப் பணியவில்லை. இதனால் பாலையாவும் அவரது மனைவியும் வேலைநீக்கம் செய்யப்பட்டனர்.

### எமது வாதம்

இவ்வழக்கு கண்டி தொழில் விசாரணை மன்றத்தில் அண்மையில் விசாரணைக்கு வந்தது. பாலையாவின் சார்பில் இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்க (செங்கொடிச் சங்கம்) பொதுச் செயலாளர் தோழர் என். சண்முகதாசன் வாதிட்டார். பாதி அறையை உபயோகிக்கும்படி பாலையாவை சுப்ரிண்டன் வற்புறுத்தியது சட்டவிரோதமானது, நீதிக்கும் புறம்பானது என அவர் தனது வாதத்தில் சுட்டிக்காட்டினர். ஆகவே சட்டவிரோதமான உத்தரவுக்குப் பணியாததற்காக வேலைநீக்கம் செய்வது நீதியற்ற செயல் எனவும் கூறினர்.

வைத்திய தேவைச் சட்டத்தின் 32 (1) பகுதியின் 48ஆம் பிரிவின் நியதிப்படி "தகுதியான வசிப்பிடமும் சுத்தமான சுற்றுப்புறமும் அழுக்கு அப்புறப்படுத்துவதற்கு ஏற்ற வசதியும் வைத்திய, சுகாதாரப் பகுதி அதிகாரிக்கு திருப்தி ஏற்படுத்தும் முறையில் தொழிலாளர்களுக்கு அமைத்துக் கொடுக்க வேண்டியது சுப்பிரிண்டனின் கடமை" எனக் கூறப்பட்டுள்ளது.

நோய் (தொழிலாளர்கள்) சட்டத்தின் 12வது பகுதி மந்திரியின் அனுமதியோடு சுகாதாரப் பகுதி அதிகாரி, முழு இலங்கைக்கோ அல்லது ஒரு பகுதிக்கோ இச்சட்டத்தின் கீழுள்ள நோய்களுக்கு மருத்துவம் செய்து நோய்களைத் தடுக்கும் முறையில் தொழிலாளர்களின் லயனை சுத்தமாக வைத்திருக்க சட்டங்கள் இயற்ற அதிகாரம் வழங்குகிறது. குறிப்பாக, தொழிலாளர்களின் வீடுகள் அமைக்கப்படும் இடங்களை நிர்ணயிப்பதற்கும் அமைக்க வேண்டிய முறையையும் அவற்றைக் கட்டுதல் போன்றவற்றைக் கவனிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

1950-ஆம் ஆண்டு ஒக்டோபரில் வெளியாகிய இலங்கை அரசாங்க வர்த்தமானி 10,168 உள்ள வைத்திய சுகாதார சேவை அதிகாரியின் நோய் (தொழிலாளர்கள்) சட்டத்தின் 15வது பகுதியின் 9வது பிரிவின்படி

ஒரு அறை வீடுள்ள லயனைப் பொறுத்தவரையில் (அ) பட்டியலுக்கு அல்லது (ஆ) பட்டியலுக்கு ஏற்றதாக இருக்குமேயானல் அவ்வித வீடுகளில் இரண்டு வயது வந்தவர்களும் 12 வயதுக்கு மேற்படாத 3 பிள்ளைகளுமுள்ள குடும்பங்களுக்குமேல்குடியிருக்கமுடியாது

இரண்டு அறையுள்ள லயனைப் பொறுத்தவரையில் (அ) பட்டியலுக்கு அல்லது (ஆ) பட்டியலுக்கு ஏற்றதாக இருக்குமேயானல் அவ்வித வீடுகளில் 4 வயது வந்தவர்களும் 12 வயதுக்கு மேற்படாத 4 பிள்ளைகளுக்கும் மேலாக உள்ள குடும்பங்களினல் குடியிருக்க முடியாது என் வரையறுக்கப்பட்டுள்ளது,

### இடவசதி பற்றி விபரம்

ஓர் தனியறைக்கு இருக்க வேண்டிய இடவசதிபற்றி (அ) பட்டியலில் கூறப்பட்டுள்ளதாவது:

(அ) உயரம்: சராசரி உயரம் 10 அடிக்குக்குறையாமலும் எவ்விடத்திலும் 9-அடிக்குக் குறையாமலும் இருத்தல்வேண்டும்.

(ஆ) தரை. ஒரு தனியறையினுடைய நிலப்பரப்பு 160 சதுர அடிக்குக் குறையாமலும் இரு அறைவீடுகளைபொறுத்த வரையில் 120 அடிக்குக் குறையாமலும் நீளமோ அகலமோ 10 அடிக்குக் குறையாமலும் இருக்க வேண்டும்.

மேலும் தோட்ட தொழிலாளர்கள் (இந்தியர்) சட்டத்தில் எதாவது தோட்டத்தில் முதலாளியினல், குடும்பத்தோடு வாழுகின்ற தொழிலாளிக்கு வீடு வழங்கப்படுமேயானல் அவனுக்கோ, அவளுக்கோ தனியே ஓர் அறை வழங்க வேண்டும். அத்தோடு அவனுடைய அல்லது அவளுடைய குடும்பத்தைத் தவிர்ந்த வேறு எவரோடும் (பங்குபோட்டு வாழும்படி வற்புறுத்த முடியாது) என வரையறுக்கப்பட்டுள்ளது

தொழில் விசாரணை மன்றத்தில் இப்பொழுதும் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

## சகல தொழிற் சங்கங்களையும் அழைக்கிறோம்

தொழில் மத்தியஸ்த சபை பண்டாரநாயக்காவின் ஆட்சியினுல் நிறுவப்பட்டது. இதன் மூலம் தொழிலாளர்கள் பல நல்ல பலனைப்பெற்ருர்கள்.

ஆனல் அண்மையில் தொழில் மத்தியஸ்த சபையின் தீர்ப்பு ஒன்றை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது. அத்தோடு தொழில் மத்தியஸ்த சபை தீர்ப்பு வழங்க அதிகாரம் பெற்றதல்ல என்ற ஒரு மனு சம்பந்தமாகவும் உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கவுள்ளது. இப்பொழுது முதலாளிமார்கள் பெரும்பாலும் தொழில் மத்தியஸ்த சபைத் தீர்ப்புகளுக்கு எதிராக உயர் நீதி மன்றத்திற்கு மனுச்செய்கின்றனர். உயர் நீதிமன்றத்தில் தொழிற்சங்க பிரதிநிதிகள் தொழிலாளர்களின் சார்பில் வாதாட முடியாத நிலையுள்ளது.

ஆதலால் இக் குறைபாடுகளை நீக்கி தொழில் மத்தியஸ்த சபைத் தீர்ப்புகளுக்கு எதிரான மனுக்களை பரிசீலனை செய்ய தொழில் மத்தியஸ்த உயர்சபை ஒன்றை நிறுவவும், இப்பொழுதுள்ள சட்டத்திலிருக்கும் குறைபாடுகளை நீக்கவும் கோரி அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுவது அவசியமாகும்.

இதைச் சகல தொழிற் சங்கங்களின் கூட்டு முயற்சியின் அடிப்படையில் செய்யும் நோக்கத்தோடு ஐ. தொ. கா., இ. தொ. கா., தொழிற் சங்க ஐக்கிய கமிட்டி, சிறிலங்கா சாதிக்க குரு சங்கமய, இலங்கை தொழிற் சங்க மத்திய கவுன்சில் ஆகியவற்றை ஒரு மாநாட்டிற்கு வரும்படி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் அழைத்துள்ளது.

# ஆட்சியே உன் போக்கினை மாற்று

## தொழிலாளர் கூட்டத்தில் ஏகமனதான தீர்மானம்

கடந்த மாதம் 27-ம் திகதி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் கொழும்பு நகரத்தில் மாபெரும் அணிவகுப்பையும், கொழும்பு புதிய நகமண்டபத்தில் ஒரு பிரமாண்டமான கூட்டத்தையும் நடத்தியது. (இது சம்பந்தமான செய்தியை முதல் பக்கத்தில் பார்க்கவும்) அக்கூட்டத்தில் கீழ்க் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(1) தனிப்பட்ட ஸ்தாபனங்களில் வேலை செய்கின்ற தொழிலாளர்களின் சார்பில் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனம் சமர்ப்பித்த 15 கோரிக்கைகள் சம்பந்தமாகப் பேச்சுவார்த்தைக்குக் கூட முன்வர மறுத்த இலங்கை முதலாளிமார் சம்மேளனத்தை இக் கூட்டம் கண்டிப்பதோடு, வேலை நிறுத்தப்போராட்டத்திற்குத் தயாராகும்படி இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் அங்கத்தவர்களை அழைக்கிறது.

இலங்கைத்தொழிற் சங்க சம்மேளனத்திற்கிடையிலும் இலங்கை முதலாளிமார் சம்மேளனத்திற்கிடையிலும் 1959ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட கூட்டுஒப்பந்தம் என் 1ஐ ரத்துச்செய்வதையும் இக்கூட்டம் ஆமோதிக்கிறது.

(2) இ. போ. ச. தொழிலாளர்களின் 9 குறைந்த பட்சக் கோரிக்கைகளை இக்கூட்டம் ஆதரிப்பதோடு, இப்போதுள்ள தகராறைத் தீர்க்கவும், கோரிக்கைகளை வழங்கவும் தொழிற்சங்கங்களோடு பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும்படி அரசாங்கத்தையும் இ. போ. ச.வையும் வேண்டுகிறது.

இ. போ. ச. தொழிலாளர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்காக எதிர்காலத்தில் நடத்தவிருக்கும் சகல போராட்டங்களுக்கும் ஏனைய தொழிலாளி வர்க்கத்தின் ஆதரவுகிடைக்குமென இக்கூட்டம் உறுதியளிக்கிறது.

(3) வேலை நிறுத்தம் செய்தவர்களைப் பழிவாங்கும் இ. போ. ச. வின் தற்போதைய போக்கினைக் கூட்டம் கண்டிப்பதோடு, உடனடியாக அக் கொள்கையைக் கைவிடுமாறு வேண்டுகிறது.

கீழ்காணும் முறைகளைக் கடைப்பிடித்து இ. போ. ச. வின் நிலமையை பழைய நல்ல நிலைக்குக் கொண்டுவரும்படி அரசாங்கத்தைம் இ. போ. ச. வையும் இக் கூட்டம் வேண்டுகிறது.

(அ) வேலை நிறுத்தத்திற்கு முன் வேலை செய்த வழிகளில் சகல தொழிலாளர்களையும் மீண்டும் வேலை செய்ய அனுமதித்தல்.

(ஆ) வேலை நிறுத்தத்தின் போது நடைபெற்ற சம்பவங்களுக்காகத் தடுத்துவைக்கப்பட்ட தொழிலாளர்களின் தடையை நீக்குதல்.

(இ) வேலை நிறுத்தக் காரர்களுக்கு எதிராக உள்ள போலிஸ் வழக்குகளை வாபஸ் பெறுதல்.

(4) அரசாங்கம் தனது தொழிலாள விரோதப் போக்கையும், சம்பள உயர்வைத் தடுக்கும் கொள்கையையும் கைவிடுமாறு இக் கூட்டம் வேண்டுகிறது. முக்கியமாக தொழிலாளர்களின் வேலை நிறுத்தங்களை முறியடிக்க போலிசையும் ராணுவத்தையும் அழைக்கும், நடைமுறையிலுள்ள ஜனநாயக உரிமைகளை அக்காலங்களில் தடைசெய்யும் போக்கினைக் கைவிடுமாறும் அரசாங்கத்தை வேண்டுகிறது.

### யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் வாலிப மாநாடு

தமிழரசு வாதிகள் காட்டிய பாதையின், தவற்றைஉணர்ந்த யாழ்ப்பாண மாவட்ட வாலிபர்கள் இன்று பெருமளவில் கம்யூனிஸ்ட் வாலிப சங்கத்தின் கீழ் அணிதிரண்டு வருகின்ருர்கள்.

தமது எதிர்கால வாழ்விற்கு தமிழ் இனத்தின் விமோசனத்துக்கு நல்லதோர் திட்டம் தீட்ட அவ்வாலிபர்கள் இம்மாதம் 10ம் திகதி யாழ்ப்பாண நகர மண்டபத்தில் ஒன்றுகூடுகின்றனர்.

அம்மாநாட்டில் கலந்து கொள்ள தோழர்கள் பீட்டர் கெனமன் M.P., என். சண்முகதாசன் (இலங்கைத் தொழிற் சங்க சம்மேளன பொதுக்காரியதரிசி) ஆகிய தலைவர்கள் கொழும்பிலிருந்து செல்கின்றனர்.

## கேள்வி-பதில்

வாசகர்களுடைய சந்தேகங்களைப் போக்கும் நோக்கத்தோடு தொழிலாளியில் கேள்வி பதில் பகுதி ஒன்று அடுத்த இதழிலிருந்து ஆரம்பமாகும். இதை வாசகர்கள் பெரிதும் வரவேற்பார்கள் என நம்புகிறோம்.

கேட்கப்படும் கேள்விகள் அரசியல், சமுக, பொருளாதாரம் சம்பந்தப்பட்டவைகளாக இருக்க வேண்டும். தரமான கேள்விகளுக்கு மாத்திரமே பதிலளிக்கப்படும். சிறந்த கேள்வியைக் கேட்கின்ற வாசகருக்கு தொழிலாளி சார்பாக அன்பளிப்பு ஒன்றும் அளிக்கப்படும்.

(ஆசிரியர்)

## இ. போ. ச. வுக்கு 20 லட்சம் நஷ்டம்

—0—

வேலை நிறுத்தத்தினுல் 20 லட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இ. போ. ச. வே ஒத்துக்கொள்கிறது. ஆனல் ராணுவம், பொலிஸ், ஒழுங்கு செய்துபாவிக்கப்பட்ட கருங்காலிகள் ஆகியோரினுல் ஏற்பட்ட செலவையும் கூட்டினுல் உண்மையான நஷ்டம் மேலும் அதிகமாகும்.

எங்களுடைய சில கோரிக்கைகளை வழங்கி வேலை நிறுத்தத்தைத் தவிர்ப்பதற்கு இத்தொகையே போதுமானது என்பது இ. போ. ச. வுக்கோ, அரசாங்கத்திற்கோ எப்பொழுதாவது தெரிந்திருக்குமா? இல்லையானுல் எவ்வளவு பணம் வீணகப் போனலும் கவலையில்லை, தொழிலாளர்களுக்கு அதில் ஒரு சதமும் போகக்கூடாது என்பது அரசாங்கத்தின் கொள்கையா!

பதிப்பித்து வெளியிடுபவர் ஆறுமுகம் செல்லையா கந்தசாமி, 123, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. அச்சிட்டோர்: சிவாஜி அச்சகம், கொழும்பு-2.